பக்கங்கள் : பதின்னான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 13 செவ்வாய்க்கிழமை (27.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 211

## ஆயுத ஒட்டுக்குழுக்களை அரவணைத்துப் பாதுகாத்து தமிழ் மக்கள் மீது வன்முறைகளை ஏவியவர் குலதுங்க

துணை ஆயுத ஒட்டுக்குழுக்களை அரவணைத்துப் பாதுகாப்பதிலும், அவர்கள் ஊடாக வன்னி மற்றும் மன்னார் பிரதேசங்களில் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதிலும் முன்னின்று செயற்பட்டவர் மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க.

1978 இல் இராணுவத்தில் சாதாரண ஓர் அதிகாரியாக இருந்த காலம் முதலே அவர் தமிழ் பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளை முடுக்கி விடுவதில் தீவிரமாகச் செயற்பட்டவர்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

நேற்று பன்னிப்பிட்டியவில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் உயிரிழந்த மேஜர் ஜெனரல் பி.எஸ்.பாரமி குலதுங்க தனது காலம் முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராக மிகத் தீவிரமாகச் செயற்பட்ட ஒருவர் என்றும் அந்த வட்டாரங்கள் அவரை வர்ணித்தன.

மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவின் கடந்தகாலச் செயற்பாடுகளை விவரித்து கிளிநொச்சியில் புலிகள் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

(12ஆம் பக்கம் பார்க்க)

# மூத்த படைத் தளபதி குலதுங்க தற்கொலைத் தாக்குதலில் பலி!

மேலும் படங்கள் 11ஆம் பக்கத்தில்...



சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டுள்ள பொலிஸாரும் இராணுவத்தினரும்.

## வெடிகுண்டுதாரி செலுத்திவந்த மோட்டார் சைக்கிள் காரைப் பின்தொடர்ந்து வந்து மோதி வெடித்தது!!



கொழும்பு, ஜூன் 27

இலங்கை இராணுவக் கட்டமைப்பின் அதியுயர் பீடத்தில் இரண்டாவது நிலையில் உள்ள மூத்த படைத் தளபதியான மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க (வயது-55) நேற்றுக் காலை தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தார்.

கொழும்பு, ஹோமாகம பொலீஸ் பிரிவில் உள்ள பன்னிப்பிட்டியவில் தளபதி குலதுங்க பயணம் செய்துகொண்டிருந்த காரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர் எனக் கூறப்படும் நபர் ஒருவர் அதனைக் காருடன் மோதி வெடிக்கச் செய்தார்.

குண்டு வெடிப்பினால் சிதறுண்ட தளபதியின் கார் தீப்பற்றி எரிந்தது. சிதைவுகளுக்கு நடுவே இருந்து குற்றுயிருடன் மீட்கப்பட்ட தளபதி குலதுங்க மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார்.

தளபதியின் கார்ச் சாரதி, இராணுவ சார்ஜன்ட், கோப்ரல் ஆகியோர் உட்பட ஐந்து பேர் இந்தத் தாக்குதலில் பலியாகினர்.

கொட்டாவையில் உள்ள தனது இல்லத்தில் இருந்து காரில் புறப்பட்ட தளபதி வழமை போல் கடமைக்காக இராணுவத் தலைமையகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயமே வழியில் தற்கொலைதாரியின் குண்டுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ ஊடுருவும் பிரிவையும் வழி நடத்தியவர் குலதுங்க

கொழும்பு, ஜூன் 27

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மேஜர் ஜெனரல் குலதுங்க இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படைப் பிரிவுக்குத் தேவையான ஆலோசனைகளையும், தகவல்களையும் வழங்கி அதனையும் வழிநடத்தி வந்தவர் என்று பாதுகாப்புத் துறையின் உயர் மட்ட வட்டாரங்கள் நேற்று தகவல் வெளியிட்டன.

ஆழ ஊடுருவும் படைப் பிரிவுடனும், இராணுவப் புலனாய்வுத் துறையுடனும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பணிப்புறக்கணிப்பு மிகவும் இறுக்கமாக முன்னெடுக்கப்படும் என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்27

பணிப்புறக்கணிப்பு மிகவும் இறுக்கமாக முன்னெடுக்கப்படும். எந்தவித அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாமல் பணிப்புறக் கணிப்புச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பது அனைவரதும் கடமை.

பணிப்புறக்கணிப்புக்கு அச்சுறுத்தல் விடுப்பவர்கள், இப்போராட்டத்துக்குக் காரணமான கொலை அச்சுறுத்தல், நெருக்குவாரங்களை உடனடியாக நிறுத்தினால் இந்தப் போராட்டம் குறித்து மறுபரிசீலனை செய்யலாம்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்த காலத்துக்கு முன்பிருந்த பாதுகாப்பு நடைமுறைகள் அமுலுக்கு!

### வீதித் தடைகள், புதிய நிலைகளை நிறுவி சோதனைகளை இறுக்கவும் இராணுவம் முடிவு

கொழும்பு, ஜூன் 27

நாட்டின் தேசியப் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வருவதற்கு முந்திய யுத்த காலப் பகுதியில் நாடு முழுவதும் நடைமுறையில் இருந்துவந்த இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மீண்டும் அமுலுக்கு கொண்டுவரப்படவுள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வருவதற்கு முன்பு இருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை, மீளப் புதுப்பிக்கவும், மீள அறிமுகப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இராணுவம் அறிவித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படும் வன்முறைச் சம்பவங்கள் பரந்த அளவில் அதிகரித்திருப்பதும் இதில் கடைசியாக நேற்று இராணுவத்தின் மூத்த அதிகாரியான லெப்ரினட் ஜெனரல் பாரமி குலதுங்க மீது

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பயங்கரவாதம் மீதான பற்றுறுதியையே புலிகள் மீண்டும் வெளிக்காட்டியுள்ளனர்

## தாக்குதலைக் கடுமையாக விமர்சித்து ஜனாதிபதி அறிக்கை

கொழும்பு, ஜூன் 27

பயங்கரவாதத்தின் மீது விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்தும் இருந்துவரும் உறுதிப்பாட்டுக்கும், தற்கொலையாளிகளைப் பயன்படுத்திக் கோழைத்தனமான கொலைகளை அரங்கேற்றுவதிலுள்ள புலிகளின் பற்றுறுதிக்கும் மேஜர் ஜெனரல் பிராமி குலதுங்கவின் படுகொலை மற்றுமொரு உதாரணமாகும் என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இத்தகைய ஈனச் செயல்கள் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவை மட்டுமல்ல, கடும் கண்டனத்துக்குரியவை என்றும் நேற்று விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

பன்னிப்பிட்டியவில் நேற்றுக் காலை நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''விடுதலைப் புலிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்செயல்களை நாகரிக சிவில் உலகம் முழுவதும் வெறுத்து இகழ்ச்சிக்குரியதாக்க வேண்டும். எள்ளி நகையாட வேண்டும். தமிழ் மக்களின் தேவைக்கு அப்பாற்பட்ட இலட்சியத்தைத் தமது நோக்கமாகக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் அந்த நோக்கத்தை அடைவதற்குப் பயங்கரவாதமே பொருத்தமான வழி என்று நினைத்துச் செயற்படுகிறார்கள். அந்த வழிக்கே தம்மை அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதற்கு இந்தக் கொலை நல்ல உதாரணமாகும்.

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த உயர் இராணுவ அதிகாரியைக் குறி வைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது மட்டுமல்ல, சிவிலியன்களின் பாதுகாப்புக் குறித்து கிஞ்சித்தும் பொருட்படுத்தாத முறையிலும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தாக்குதலால் மக்களோ அல்லது பாதுகாப்புப் படையினரோ யாரும் அச்சமடையவும் இல்லை; அச்சமடையவும் மாட்டார்கள். அத்தோடு, விடுதலைப் புலிகளுக்கும் அவர்களது பயங்கரவாதத்துக்கும் எதிரான சமரிலிருந்து அவர்களை விலகி நிற்கவும் வைத்து விடாது.

வன்முறைகளைக் கைவிடுமாறு சர்வதேச சமூகம் நாளிலும், பொழுதிலும் விடுதலைப் புலிகளுக்கு அறைகூவல் விடுத்து வருகிறது. ஆனாலும், இந்த வேண்டுகோள்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன. இந்தக் கொலை மூலம் வன்முறைப் பாதையில் செல்வதிலிருந்து தாங்கள் இன்னமும் விலகி விடவில்லை என்பதையும் புலிகள் நன்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்புச் சபையை அவசர அவசரமாக கூட்டினார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 27

பன்னிப்பிட்டியவில் நேற்றுக்காலை இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்புச் சபையை அவசரமாகக் கூட்டி ஆலோசனை நடத்தியுள்ளார்.

நேற்றைய சம்பவத்தையடுத்து எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டது.

பாதுகாப்புத்துறையின் உயர்மட்ட உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு அப்போது உத்தரவிட்டார் ஜனாதிபதி. கொழும்பைப் போலவே புறநகர் பகுதிகளின் பாதுகாப்பையும் மேம்படுத்துமாறும் அவர் பணிப்புரை விடுத்தார் என்று தெரிய வருகிறது.

அதேசமயம், கொல்லப்பட்ட மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவின் பாதுகாப்புச் செயற்பாடுகளில் ஏதேனும் குறைபாடு இருந்ததா என்பது குறித்துக் கண்டறியுமாறும் இந்தக் கூட்டதின்போது ஜனாதிபதி பாதுகாப்புத் துறையின் உயர்மட்டத்தினரைப் பணித்தாரென அறியமுடிந்தது.

## கண்காணிப்புக் குழுவின் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 27

பன்னிப்பிட்டியவில் நேற்றுக்காலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் குறித்து இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது.

நேற்று சம்பவ இடத்திற்கு விரைந்த கண்காணிப்பாளர்கள் குழுவினர் அங்கு விவரங்களைப் பதிவு செய்துகொண்டனர். சம்பவம் குறித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெகுவிரைவில் அறிக்கையொன்றை வெளியிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றைய இந்தத் தாக்குதல், போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயலென்று கருத்துத் தெரிவித்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஓமர்சன், இவ்வாறான தாக்குதல்கள் அமைதி முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்துமென்று குறிப்பிட்டார்.

## தாக்குதல் பற்றித் தமக்குள் உரையாடிய இருவர் கைது!

### புறக்கோட்டையில் நேற்று இப்படியும் சம்பவம்

கொழும்பு, ஜூன் 27

பன்னிப்பிட்டியவில் நேற்றுக்காலை இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத்தாக்குதல் குறித்துத் தமக்குள் பேசிக்கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள் இருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை புறக்கோட்டை சீனா வீதியில் இந்த சுவாரஸ்ய சம்பவம் இடம்பெற்றது. வர்த்தக நிலையமொன்றில் கடமையாற்றும் இரு இளைஞர்கள் பன்னிப்பிட்டிய தாக்குதல் சம்பவம் குறித்துத் தாம் அறிந்த தகவல்களைத் தமக்குள் பரிமாறி உரையாடிக் கொண்டிருந்ததை அவதானித்த பொலீஸார் அவர்களை அணுகி இருவரையும் கைது செய்து பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இதன் பின்னர், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பெ. இராதாகிருஷ்ணன் பொலீஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்து, நீண்ட விசாரணைகளின் பின்னர் இந்த இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர்.

''குண்டுத் தாக்குதல் குறித்து எல்லாத் தமிழர்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக எல்லா தமிழரையும் கைதுசெய்யப் போகிறீர்களா?'' - என்று இராதாகிருஷ்ணன் எம்.பி. பொலீஸாரிடம் வினவிய போது, பொலீஸார் வாய்மூடி மௌனிகளாக நின்றனர் என்று கூறப்பட்டது.

இந்தக் கைதுச்சம்பவம் நேற்றுக் கொழும்பில் தமிழர்களிடையே சுவாரஸ்யமாகப் பேசப்பட்டது.

### வன்னிரெக் நிறுவகத்தில்

## கணனிசார் கற்கை நெறிகள் சனியன்று ஆரம்பமாகின்றன

கிளிநொச்சி, ஜூன்27

அமெரிக்கா சிலிக்கன் வலியில் தலைமைச் செயலகத்தை கொண்டுள்ள அரசசார்பற்ற நிறுவகமான வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் இரண்டுமாத பகுதிநேர கணனிசார் கற்கை நெறிகள் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இரண்டுமாதகால பயிற்சிக்காலத்தில் அடிப்படைக் கணனித்தொழில் நுட்பம், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த கணிதம், அடிப்படை தொலைத்தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

இந்தக் கற்கைநெறியை மேற்கொள்ள விரும்புவோர் வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகத்தில் விண்ணப்பங்களை நேரடியாகப் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளரிடம் ஒப்படைக்கலாம் என்றும் அல்லது விண்ணப்பதாரர் தமது சுயவிவரங்களை 'பதிவாளர், வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம், கிளிநொச்சி' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நிறைவில் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள்கல் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

## கொக்குவில் மேற்கில் நேற்று முழுநாளும் வீதிச்சோதனை

கொக்குவில் மேற்கு மற்றும் ஆனைக்கோட்டை பகுதிகளில் நேற்று முழுநாளும் வீதிச் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

சைக்கிள்களில் வருகைதந்த இராணுவத்தினர் திடீரென முக்கிய சந்திகளில் நின்று அப்பகுதியூடாகப் பயணிக்கும் பொதுமக்களைச் சோதனையிட்டனர் என்றும் -

இவ்வாறு சோதனையிட்ட படையினரில் பெரும்பாலானோர் கறுப்புத் துணியினால் முகத்தை மூடி மறைத்திருந்தனர் என்றும்.-

படையினரின் இத்தகைய நடவடிக்கை தமக்கு பீதியைத் தந்தது என்றும் - அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## 'வெல்டிங்' வேலை செய்பவர் வேலணையில் சுட்டுக்கொலை

வேலணை,ஜூன் 27

வேலணையில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் வெல்டிங் நிலையத்தில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நல்லூர் நாயன்மார்க்கட்டைச் சேர்ந்த கந்தையா யோகேஸ்வரன் (வயது 49) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை எனக் கூறப்பட்டது.

நாயன்மார்கட்டில் இருந்து சென்று வெல்டிங் நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த இவர், மதிய உணவை முடித்து பத்திரிகை வாசித்துக் கெண்டிருந்தார் என்றும் -

அச்சமயம் அங்குவந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இவரது தலையில் சுட்டுவிட்டு தப்பிவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸி சடலத்தைப் பார்வையிட்டார்.

பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு சடலம் அனுப்பிவைக்கப்பட்டது. (167-15)

## வெளிச்சத்தின் புதிய இதழ் வெளிவந்துள்ளது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' கலை இலக்கிய சஞ்சிகையின் தொண்ணூற்றி ஐந்தாவது (பங்குனி - வைகாசி 2006) இதழ் வெளிவந்திருக்கிறது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, புதுவை இரத்தினதுரை, யாத்திரிகன், மகாநுபவன், த.ஜெயசீலன், அநாமிகன், த.அகிலன், வளநாடன், செல்வசதீஸன், இரா.புவிதன், கு.பா. தீபச்செல்வன் ஆகிய கவிஞர்களது கவிதைகளும் -

க.அருள்சுப்பிரமணியம், கல்லாறு சதீஸ், நடராசா இராமநாதன், செ.யோகநாதன் ஆகியோரது சிறுகதைகளும் அத்துடன் வேரற் கேணியனின் மொழிபெயர்ப்புச் சிறுகதையும் இடம்பெற்றிருக்கின்றன.

இவற்றுடன், மயிலங்கூடலூர் பி.நடராசன், தமிழவள், தூயவன், பொன்.பூலோகசிங்கம், அ.அன்ரனி ஆகியோரது கட்டுரைகளும் - தூது, அஞ்சலி, புதியவரவு இன்னும் பலவும் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது.

## நயினை ஆலய உற்சவத்துக்குச் செல்லும் பக்தர்கள் அ.அட்டையை ஒப்படைத்து மீளப் பெறுவதில் சிரமம்

நல்லூர்,ஜூன்27

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்திற்குச் செல்லும் பக்தர்கள் நயினை துறைமுகத்தில் கடற்படையினரிடம் தமது அடையாள அட்டைகளை ஒப்படைத்துவிட்டு திரும்பப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நயினைக்குச் செல்லும் வெளியிடங்களைச் சேர்ந்த பக்தர்கள் படகில் இருந்து இறங்கியதும் நயினாதீவு துறைமுகத்தில் உள்ள சோதனைச் சாவடியில் தமது அடையாள அட்டைகளை ஒப்படைக்கவேண்டும். அடையாள அட்டையை ஒப்படைக்கும்போது சம்பந்தப்பட்டவருக்கு கடற்படையினரால் ஒரு இலக்கம் தரப்படும்.

அந்த இலக்கத்தை மீள ஒப்படைத்தே பக்தர்கள் மீண்டும் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஆலயத்துக்கு பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் செல்வதால், திரும்பவும் தத்தமது அடையாள அட்டைகளைப் பெறுவதற்காக தமக்கு வழங்கப்பட்ட இலக்கங்களைப் படையினரிடம் ஒப்படைக்கும்போது படையினர் அதற்குரிய அடையாள அட்டையை உரியவரிடம் ஒப்படைப்பதில் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர் என்றும் -

பெயர்களைக்கூட தெளிவாகப் புரிந்து கொள்ளாத நிலையில் அனைத்து அடையாள அட்டைகளையும் கிளறி எடுத்துச் சிரமப்பட்டே அடையாள அட்டை உரியவருக்கு வழங்குகின்றனர் என்றும் - கூறப்பட்டது.

இதனால், பக்தர்கள் சில சமயங்களில் படகைத் தவறவிட்டு அடுத்தபடகுக்காகக் காத்திருக்கவேண்டியுள்ளதாகவும் - விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் - ஆலயத்துக்கு வருகைதரும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குப் பாதுகாப்பு அங்கிகள் அணிவிக்கவேண்டும் என விழா உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபோதும், நேற்றைய உற்சவத்தில் கலந்துகொள்ளவந்த சிறுவர்கள் பாதுகாப்பு அங்கிகளின்றியே பயணத்தைத் [illegible] னர். (111)

## நயினை அம்மன் பெரும்திருவிழா பக்தி பூர்வமாக ஆரம்பமாகியது

நல்லூர், ஜூன்27

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருவிழா நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமாகியது.

நாட்டின் அசாதாரண நிலையை அடுத்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்தும் இம்முறை உற்சவத்திற்கு வரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை கடந்த காலத்திலும் பார்க்க குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும், நேற்றைய உற்சவத்தில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பக்தர்கள் கலந்துகொண்டனர்.

அரை மணி நேரத்துக்கு ஒரு தடவை என்ற வகையில் 23 படகுகள் போக்குவரத்துச் [illegible]. இம்முறை எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து குறிகாட்டுவான் - நயினாதீவு இடையிலான படகுக் கட்டணம் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு பயணி ஒருவரிடம் தலா 20 ரூபா அறவிடப்பட்டது.

பக்தர்களின் வசதி கருதி தேவையேற்படின் மேலதிக படகுச் சேவைகளும் நடத்தப்படும் என்றும் தனியார் படகு உரிமையாளர் சங்கப்பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - மேற்படி உற்சவத்துக்கு செல்லும் பக்தர்களுக்கான சகல போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன் குடி தண்ணீர், சுகாதாரம், தொண்டர் சேவை என்பன ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என்று வேலணை பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

அத்துடன், ஆலயச் சுற்றாடலில் அன்னதான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# கண்காணிப்புக் குழுக் கட்டமைப்பு குலைவதற்கு பொறுப்பு யார்?

யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களின் பணி மற்றும் கட்டமைப்பு தொடர்பான விடயம் மிகுந்த சர்ச்சைக்குரியதாக மாறி வருகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தால் அந்த ஒன்றியத்துக்கு உட்பட்ட நாடுகளைச் சேர்ந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்கள் அந்தப் பணியைச் செய்வதற்கான தகுதியை - நடுநிலைமையோடு கடமையாற்றும் தகைமையை - பக்கச் சார்பற்ற கொள்கைப் போக்கை - இழந்தவர்களாவர் என்றும் -

அதனால், அப்பணியை அவர்கள் செய்ய முடியாமல் போக, இலங்கையில் மீள யுத்தம் வெடிக்கும் ஆபத்து நிலை ஏற்படும் என்றும் -

எனவே, ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகளைத் தடை செய்யும் திட்டம் அமைதிக்கல்ல, போருக்கே வழி வகுக்கும் என்றும் -

உத்தேச தடை வருவதற்கு முன்னரே இப்பத்தியில் திரும்பத் திரும்ப எச்சரித்து வந்தோம்.

இந்த நிலைமை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு உத்தேசத் தடை விதிக்க முன்னரே நன்கு தெரிந்தது என்பதை விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இப்போது வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை விதிக்கும் திட்டத்தினால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கட்டமைப்புக்கு ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்து நோர்வேக்கு நேரத்துடனேயே எச்சரிக்கப்பட்டது என்ற தகவலையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

அப்படியிருந்தும் உத்தேசத் தடையால் எழக் கூடிய அபாய நிலை குறித்து - போர் வெடிக்கக் கூடிய மோசமான நெருக்கடி பற்றி - நேரத்துடனேயே சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு எச்சரித்து, அத்தகைய முடிவை எடுக்காமல் தவிர்க்கச் செய்வதற்கு சர்வதேச மட்டத்தில் செயலாற்ற வேண்டிய தரப்புகள் தவறியதால் இப்போது அந்த மோசமான நிலையை நாடு எதிர்கொள்ள வேண்டிய ஆபத்து உருவாகி வருகின்றது.

அமைதி முயற்சிகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் புலிகளுக்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்திக் கொடுத்து, அதன் மூலம் புலிகளை அடிபணிய வைக்கலாம் என்று இவ்விடயங்களைக் கையாண்ட சில தரப்புகள் மனப்பால் குடித்தன. அதன் காரணமாக தமது மென்ன நடவடிக்கை மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடைத் திட்டத்துக்கு அவை 'ஆசீர்வாதமும்' அளிக்கின்றன.

அந்தப் போக்கு வெற்றியளிக்காது. அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் எந்தத் திட்டத்துக்கும் - முயற்சிக்கும் - புலிகள் தலை வணங்கவே மாட்டார்கள் என்பதை இப்பத்தியில் பல தடவைகள் - பழைய பல உதாரணங்களோடு - தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்திருந்தோம்.

அதுவே நடந்து முடிய, இப்போது 'உள்ளதையும் கெடுத்தானாம் ஆண்டி' என்பது போல யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கட்டமைப்பையே கேள்விக்குள்ளாக்கிவிட்டு, முழுசுகின்றன அத் தரப்புகள்.

'நோர்ட்டிக்' நாடுகளைச் சேர்ந்தவர்களே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிப்பது என்று அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 3.5 ஆவது பிரிவு தெட்டத் தெளிவாகக் கூறுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதிய அரசு பதவியேற்றதை அடுத்து இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான உறவு சீர்கெட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு வாசகத்தையோ - அல்லது ஏன் ஒரு சொல்லையோ - கூட மாற்றி அமைக்க முடியாத அளவுக்கு இருதரப்பு முரண்பாடு முற்றி வந்தது என்பது அனுசரணைத் தரப்பான நோர்வே உட்பட சகலருக்கும் தெரிந்திருந்த அம்சம்தான்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் யுத்தநிறுத்த உடன்பாட்டின் முக்கிய பிரிவை - யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களின் கட்டமைப்புத் தொடர்பான பிரதான ஷரத்தை - பெரிதும் பாதிக்கக் கூடிய விளைவைத் தரும் ஒரு நடவடிக்கை சர்வதேச மட்டத்தில் எடுக்கப்படும்போது அது குறித்து சம்பந்தப்பட்ட இரு தரப்புகளையும், சர்வதேச சமூகத்தையும் நேர காலத்தோடு பகிரங்கமாக எச்சரித்து, விளைவுகளைத் தெளிவுபடுத்தி, நிலைமையை வெளிப்படுத்தியிருக்க வேண்டிய பொறுப்பு அனுசரணைத் தரப்பைச் சேர்ந்தது என்பதுதான் பொதுவான அபிப்பிராயம்.

"ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடைத் திட்டம் அமைதி முயற்சிகளைப் பாதிக்கும், ஆக்கபூர்வமான நிலைமையைத் தராது" - என்ற சாரப்பட பொதுவாகக் கருத்துத் தெரிவித்திருப்பதை விடுத்து, அதற்கு அப்பால் சென்று யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் கட்டமைப்பையே அது அடியோடு பாதித்துவிடும் என்ற பெறுபேறை - நேரத்துடனேயே, பகிரங்கமாக அனுசரணைத் தரப்பு வெளிப்படுத்தியிருக்குமானால் இன்றைய இக்கட்டு நிலையை ஏற்படுத்தியமைக்கான முழுப் பொறுப்பும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகித்துக் கொண்டு, கண்காணிப்புப் பணியை முன்னெடுக்கும் மூன்று நாடுகள் மீதும் - சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகியவை மீது - வீழ்ந்திருக்கும்.

அப்படிச் செய்யப்படாததால் இன்றைய இக்கட்டு நிலைக்குக் கணிசமான பொறுப்பு அனுசரணைத் தரப்பான நோர்வே மீது விழுவது தவிர்க்க முடியாததாகும்.

# பகிடிவதையில் ஈடுபடுவோர் குறித்து தகவல் தந்து உதவுமாறு கோரிக்கை

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் விடுத்தது

யாழ்ப்பாணம்,ஜூன்27

பகிடிவதையில் ஈடுபடும் மாணவ, மாணவியர் குறித்து தகவல் தந்து உதவுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வருகின்ற புகுமுக மாணவர்களுக்கு கடந்த காலங்களிலேயே பகிடிவதை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகளை பெருமளவான மாணவர்கள் பேணி வருகின்றனர். ஆனாலும், ஒரு சில சிரேஷ்ட மாணவர்கள் சிறுபிள்ளைத்தனமாக கேலித்தனமான நடவடிக்கையில் ஈடுபடுவது பல்கலைக்கழகத்துக்கே அவப்பெயரை ஏற்படுத்துகின்ற செயற்பாடாகவே இருக்கின்றது. எனவே, இவ்வாறான ஒரு சில மாணவர்கள் திருந்தி தம் மீதுள்ள சமூகப் பொறுப்பை உணர்ந்து நடக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன், எந்தப் பீடத்தைச் சேர்ந்த புகுமுக மாணவர்களாயினும் எக்காரணம் கொண்டும் வெளியிடங்களில் சிரேஷ்ட மாணவர்களினை சந்திக்க வேண்டிய அவசியமில்லை. எனவே, சந்திப்பதனைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பகிடிவதையில் தொடர்புபட்ட சிரேஷ்ட மாணவர்களின் விவரங்கள் எமக்கு 021 222 3744 எனும் தொலைபேசி ஊடாகவும் "பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக்கழகம்" என்னும் முகவரிக்கூடாகக் கடிதம் மூலமும் தெரியப்படுத்துமாறு சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறான மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென அன்புடன் அறிவிக்கின்றோம்.

வர இருக்கின்ற புகுமுக மாணவர்களை ஒருசில சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதைக்குட்படுத்தி வருகின்றனர் என்ற செய்தியையும் அவ்விடயங்களையும் தெரிவித்து உதவிய பத்திரிகை நிறுவனங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

# ஓலை வெட்டச்சென்ற சிப்பாய் விடத்தற்பளையில் சடலமாக மீட்பு

தென்மராட்சி,ஜூன்27

மிருசுவில் விடத்தற்பளை பற்றைக் காட்டுப் பகுதியில் மிருசுவில் கெற்பேலி முகாமைச் சேர்ந்த சபுதன்நிவே அஜித் பிரியங்க பியதாச (வய 35) என்ற சிப்பாயின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

விடத்தற்பளைப் பகுதியில் பனையோலை வெட்டச் சென்ற இந்தச் சிப்பாய் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து நீதிவான் சம்பவ இடத்தையும் மிருசுவில் மருத்துவமனையில் சிப்பாயின் சடலத்தையும் பார்வையிட்டார்.

சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி மூலம் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் -

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் - நீதிவான் பொலிஸாரைப் பணித்தார். (117)

# வடக்கு - கிழக்கு உள்ளூராட்சிகளில் ஆளணிக் குறைப்பு தேவையற்றது

## திணைக்கள வட்டாரங்கள் அபிப்பிராயம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி அமைப்புகளில் ஆளணிக் குறைப்புச் செய்ய எவ்விதத்திலும் இடமளிக்கக்கூடாது என்று உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சி அமைப்புகள் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டே ஆளணியை உருவாக்கவேண்டும் என்ற யோசனை மாகாணமட்டத்தில் ஆராயப்பட்டுவருகின்றது.

இது குறித்துக் கருத்தறியமுற்பட்ட போது திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:-

ஆளணி மீளாய்வு நடவடிக்கைக்கு எதிராக வடக்கு - கிழக்கில் உள்ள 71 சபைகளும் குரல்கொடுக்கவேண்டும். வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புதிய கைத்தொழில் முதலீடுகளோ அல்லது விவசாயத்துறை உற்பத்திகளோ அல்லது ஏனைய வருமானம் தரும் உற்பத்தி வேலைவாய்ப்புகளோ இல்லை. 1980ஆம் ஆண்டுமுதல் இங்கு போர்ச் சூழல் நிலவுகிறது.

இந்த நிலையில் ஆளணிகளை மேலதிகமாக உருவாக்கி தமது சமுதாயத்திற்கும் உள்ளூராட்சி வளர்ச்சி அபிவிருத்திக்கும் வழிகோல வேண்டுமே தவிர ஆளணிக் குறைப்புக்கு வழியேற்படுத்தக்கூடாது.

இந்தவகையில் 'வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணியைத் தீர்மானித்தல்' என்ற நடவடிக்கை ஊடாக வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள ஆளணிக் குறைப்பு நடவடிக்கைக்கு எவ்விதத்திலும் அனுமதிக்கக்கூடாது. தென்பகுதி உள்ளூராட்சி சபைகளில் ஆளணிகள் புதிய பதவியணிகளில் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதியில் இன்று அசாதாரண சூழ்நிலையில் நாம் ஆளணி அதிகரிப்புக்கு சகல அரச தரப்பு அதிகாரிகளும் மற்றும் இதனோடு தொடர்புபட்ட சங்கங்களும் உள்ளூராட்சி தொழில் சங்கங்களும் முன்வர வேண்டும் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (185)

# அரச சமாதானப் பணிப்பாளர் விளக்கம்

கொழும்பு, ஜூன் 27

தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு அழைத்துவருவதற்கு அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டுவருகிறது என அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித கொஹோன்ன தெரிவித்தார்.

கண்டியில் கடந்த வெள்ளியன்று அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளைத் தரிசித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

சர்வதேச சமூகமும் புலிகளை பேச்சுக்கு அழைத்துவருவதற்கு ஈடுபட்டு வருகின்றது.

பேச்சின்மூலம் சமாதானத்தைத் தோற்றுவிக்கும் பொருட்டு அரச சமாதான செயலகம் அதிகபட்சமாகக் கவனம் செலுத்திவருகின்றது எனத் தெரிவித்த அவர், இதனையொட்டி சகல வியூகங்களையும் அரசு பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார். (க-12)

## கொடிவாரம் குறித்து கலந்துரையாடல்

வட்டக்கச்சி,ஜூன்27

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக் கொடிவாரம் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு வைத்தியசாலையின் புதிய கட்டட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், கிளிநொச்சிப் பிரதேச கிராம சேவையாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர்கள் ஆகிய அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மேம்பாட்டுப் பேரவையின் செயலாளர் எஸ்.தர்மரட்ணம் கேட்டுள்ளார். (203-405)

## உதயவாக்கு

சிறந்த மனிதர்களின்றி எந்தவொரு சிறப்பான விடயத்தையும் சாதிக்க முடியாது. சிறப்பாக செயற்பட தீர்மானிப்பவர்கள்தான் சிறந்த மனிதர்களாக முடியும்.

-சார்ள்ஸ் டிகால்

## நாளை

ஆனி - 14
புதன்கிழமை
28.06.2006
திதி : திருதியை
பின்னிரவு : 12.15
நட்சத்திரம் : பூசம்
முன்னிரவு : 08.08
சுபநேரம் : 04.25 - 05.55
ராகுகாலம் : 11.55 - 01.25

# மாவைக் கந்தன் உற்சவம் வெள்ளியன்று ஆரம்பம்



யாழ்ப்பாணம்,ஜூன்27

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய கார்ம்யோற்சவங்கள் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளன.

அதிவிசேட தினங்களாக 5ஆம் திருநாள் எதிர்வரும் 4ஆம்திகதி ஷண்முகப் பெருமானது திருநடனமும் 21ஆம் திருநாளான எதிர்வரும் 20ஆம் திகதி திருக்கார்த்திகை விழாவும் 24ஆம் திருநாளான 23ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 25ஆம் திருநாளான 24ஆம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை கண்டகி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

பாதுகாப்புக் காரணமாக இவ்வருடம் தனியார் வாகனங்களில் ஆலயத்திற்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் - இலங்கை போக்குவரத்துச் சபை தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் இருந்து மாவிட்டபுரம் சென்றுவர பஸ்வசதிகளைச் செய்துள்ளதென்றும் மாவை ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

பக்தர்களின் நன்மைகருதி ஆலய வழிபாட்டுக்குத் தேவையான பொருள்களை ஆலயச் சூழலில் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் -

ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கென தினமும் அன்னதானம் வழங்கப்படவுள்ளது என்றும் -

அதேபோல் சுகாதாரம், போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு என்பவற்றை அந்தந்தப் பிரிவினர் நடைமுறைப்படுத்துவர் எனவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகக் கடற்றொழிலாளரைப் பாதிக்கும் கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்க!

## இந்தியப் பிரதமரிடம் 'புதிய தமிழகம்' கோரிக்கை

மதுரை,ஜூன்27

தமிழக மீனவர்களைப் பாதிக்கும் 'கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச்செய்யப் போவதாக பிரதமர் மன்மோகன்சிங் அறிவிக்கவேண்டும் எனப் புதிய தமிழகக் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி பிரதமரைக் கேட்டுள்ளார்.

மதுரையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணசாமி இது தொடர்பாகச் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்:-

இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண மத்திய அரசு முயற்சிக்கவேண்டும். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கவேண்டும், பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச அமைப்புகள் மூலம் இலங்கையை நிர்ப்பந்திக்கவேண்டிய கடமை இந்தியாவுக்கும் உண்டு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் முதலாம் திகதி மதுரையில் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்பேரணியில் பங்கேற்க அனைத்துக் கட்சியினதும் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் - என்றார்.

கச்சதீவுக் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுடப்படுவதும், கைதுசெய்யப்படும் அடிக்கடி இடம்பெறும் அசம்பாவிதங்கள் இதனைக் காரணம் காட்டியே இலங்கையுடன் இந்தியா செய்துள்ள கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவேண்டும் என்று புதிய தமிழகக் கட்சி பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (202)

## இந்தோனேசியாவில் கடும் நிலநடுக்கம்

ஜகார்த்தா, ஜூன்27

இந்தோனேசியாவின் சுலவேசி மாகாணத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

சுலவேசி மாகாணத்தில் தென்மேற்கு பகுதியான மானாடோவை மையமாகக் கொண்டு கடலுக்கடியில் 250 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஹாங்காங் வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

ரிச்டர்அளவில் 6.2 எனப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தினால் அடுக்குமாடி வீடுகள், கடைகள் உள்ளிட்ட கட்டடங்கள் பலவற்றில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன.

குடியிருப்புகளில் தங்கியுள்ள மக்கள் பதறியடித்து வெளியேவந்தனர்.

இதனால் நகரமெங்கும் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதமோ பொருள்சேதமோ ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. (202)

## ஈராக்கிலிருந்து ஜப்பான் படையை விலக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

பஸ்ரா,ஜூன்27

ஈராக்கிலிருந்து தனது வீரர்களை ஜப்பான் அரசு திரும்பப் பெறத் தொடங்கியுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதை ஜப்பான் ஆதரித்தது. சதாம் தலைமையிலான அரசு கவிழ்க்கப்பட்ட பிறகு அங்கு அமைதியை நிலைநாட்ட சர்வதேச படைகளின் உதவியை அமெரிக்கா நாடியது.

அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகள் தமது படைகளை ஈராக்கிற்கு அனுப்பிவைத்தன.

ஆனால், அங்கு அந்நியப் படைகளுக்கு எதிராகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முதன்முறையாக ஈராக்கிற்குத்தான் ஜப்பான் தனது படையை அனுப்பியது.

கடந்த 5 நாள்களுக்கு முன் தனது வீரர்களை திரும்பப்பெற ஜப்பான் முடிவு செய்தது. அதன்படி 600 வீரர்கள் கொண்ட 12 இராணுவ வாகனங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை குவைத்தை நோக்கிப் புறப்பட்டன. இதை ஜப்பான் இராணுவ அதிகாரிகளும் உறுதிசெய்தனர். பிரான்ஸும் தனது இராணுவத்தை ஈராக்கிலிருந்து திரும்ப அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (202)

## அமெ. படைகளின் எண்ணிக்கையை ஈராக்கில் குறைப்பதற்குத் திட்டம்

நியூயோர்க்,ஜூன்27

ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை அடுத்த ஆண்டுக்குள் ஓரளவுக்குக் குறைக்கப்படும்.

இத்தகவலை அமெரிக்க இராணுவத் தளபதிகளில் ஒருவரான ஜார்ஜ் கசே, 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

ஈராக்கில் தற்போது ஒரு லட்சத்து 27 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் தங்கியுள்ளனர். மேலும் செப்ரெம்பருக்குள் இவர்களில் சிலர் அமெரிக்காவுக்குத் திரும்ப அழைக்கப்படுவார்கள். எதிர்வரும் அடுத்த ஆண்டுக்குள் மேலும் பலர் இதேபோன்று வாபஸ் பெறப்படுவார்கள்.

2008ஆம் ஆண்டுக்குள் பெரும்பகுதி அமெரிக்க வீரர்கள் நாடு திரும்புவார்கள்.

ஈராக்கில் அல்-கெய்டா பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் நீடித்து வருகிறது. பாதாள உலகக் குழுவின் ஆதிக்கமும் தலைதூக்கியுள்ளது. ஷியா பிரிவு பயங்கரவாதிகளுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. எனவே, அமெரிக்கப் படையினர் ஈராக்கில் தொடர்ந்தும் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது - என தளபதி மேலும் தெரிவித்தார். (202)



அண்மையில் தீவிரவாதிகளால் பக்தாத்தில் கடத்திச் செல்லப்பட்ட நான்கு ரஷ்ய ராஜதந்திரிகளில் ஒருவர் முகமூடி அணிந்த கடத்தல்காரர்களுடன் காணப்படுகிறார். இணையத்தளத்தில் இப் படம் வெளியாகியுள்ளது. ஏற்கனவே மூன்று ரஷ்ய பணயக் கைதிகளும் கொலைசெய்யப்படுவது இணையத்தளத்தில் காட்டப்பட்டிருந்தது.

## இந்திய அணுசோதனையைத் தடுக்க அமெரிக்க எம்.பிக்கள் பிரயத்தனம்

வாஷிங்ரன்,ஜூன்27

இந்தியா அணுகுண்டு சோதனையை நடத்தினால், உத்தேச இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாடு ரத்துச் செய்யப்பட்டுவிடும் என்ற நிபந்தனையை அந்த உடன்பாட்டில் சேர்க்கவேண்டும் என்று அமெரிக்க எம்.பிக்களில் சிலர் வலியுறுத்தினர்.

அமெரிக்காவிடமிருந்து அணுசக்தித் திட்டத் தொழில்நுட்பங்களை இந்தியா பெற விரும்பினால் ஈரான் தொடர்பாக அமெரிக்கா மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் இந்தியா ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்னும் நிபந்தனையையும் அந்த உடன்பாட்டில் சேர்க்கவேண்டும் என்றும் சில எம்.பிக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அணுசக்தியை ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்துவதில் இந்தியாவுக்கு அமெரிக்காவும் அணுசக்தித் தொழில்நுட்பத்தில் வளர்ச்சி அடைந்த பிரான்ஸ், ஜேர்மனி போன்ற இதர நாடுகளும் உதவி அளிக்க வகை செய்வதே அந்த உடன்பாடு.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இந்தியாவுக்கு வருகைதந்தபோது, பூர்வாங்க உடன்பாடு கையெழுத்தானது. ஆனால், அதை அமெரிக்க நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும்; அத்தோடு, அமெரிக்க அணுசக்தித் தொழில்நுட்பங்களை இந்தியா பெற வசதியாக, சில விதிவிலக்குகளை அளிக்கும் வகையில், அமெரிக்காவில் 1954ஆம் ஆண்டு அணுசக்தி சட்டத்தைத் திருத்தவும் வேண்டும்.

அப்பிரச்சினையை அமெரிக்க செனட் சபையின், 18 உறுப்பினர்களைக் கொண்ட சர்வதேச உறவுகள் சபை இன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் 50 உறுப்பினர்களைக் கொண்ட வெளியுறவு சபை அப்பிரச்சினையை நாளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவிருக்கிறது.

அத்தோடு, இந்த ஆண்டு இறுதியில் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, இந்த ஆண்டு குறைவான நாள்களே அமெரிக்க நாடாளு மன்றக் கூட்டம் நடைபெறவுள்ளது. ஆனால், அந்த உடன்பாட்டுக்கான ஒப்புதலை அமெரிக்க நாடாளுமன்றம் தாமதம் செய்யாமல் அளிக்கவேண்டும்; தேவையான சட்டத்தை விரைந்து நிறைவேற்றவேண்டும் என்று அதிபர் ஜோர்ஜ் புஷ், துணை அதிபர் டிக் செனி உள்ளிட்டோர் வலியுறுத்தியுள்ளனர்.




## ஆயுதங்களை ஒப்படைத்தால் மட்டுமே அரசில் மாவோஜிஸ்ட்டுக்களுக்கு இடம்

### இப்படிக் கூறுகிறார் நேபாள உள்துறை அமைச்சர்

காத்மண்டு, ஜூன்27

ஐ.நா. சபையின் கண்காணிப்பின் கீழ் ஆயுதங்களை ஒப்படைக்காவிட்டால் இடைக்கால அரசில் சேருவதற்கு மாவோயிஸ் ட்டுகளை அழைக்கமாட்டோம் என்று நேபாள உள்துறை அமைச்சர் கிருஷ்ணா சித்தவுலாகூறியுள்ளார்.

நேபாள உள்துறை அமைச்சரும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்தும் குழுவின் தலைவருமான கிருஷ்ணா சித்தவுலா இது தொடர்பாகத் தெரிவிக்கையில்:-

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி கண்காணிப்புக் குழுவிடம் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். அதற்கு முன்னர் நாட்டின் இடைக்கால அரசில் மாவோயிஸ்ட்டுக்கள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலும் ஆயுதங்களை ஒப்படைக்கும் பணியும் ஒரே நேரத்தில் நடைபெறும்.

அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடைபெறும் போது நேபாள இராணுவம் மற்றும் மாவோயிஸ்ட்டுக்களின் துப்பாக்கிகளுக்கு ஒய்வு அளிக்கப்படும். மாவோயிஸ்ட்டுகளுக்கு ஒரு மாதத்தில் அமைச்சரவையில் இடம் அளிப்பது சாத்தியமில்லை - என்றார்.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் ஆயுதங்கள் முழுவதையும் ஒன்று அல்லது இரண்டு மாதத்திற்குள் நிர்வகிக்க முடியாது என்றும் நேபாள நாட்டுக்கான ஐ.நா.சபை உதவிப் பிரதிநிதிகுல் சந்தா கௌதம் தெரிவித்துள்ளார்.(202)



திபெத்தையும் சீனாவையும் இணைக்கும் ரயில்பாதை அமைக்கவிருப்பதைஎதிர்த்து இந்தியாவில் வாழும் திபெத்தியர்கள் நேற்று திங்கட்கிழமை புதுடில்லியில் உள்ள சீன தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் தூதரகத்திற்குள் பாய்வதற்கு முயல்வதையும் - பொலீஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க முனைவதையும் படத்தில் காணலாம்.

## தி.மு.க. ஆட்சியைப் பிடித்த கையோடு ஜெயலலிதா மீது மற்றொரு வழக்கு

புதுடில்லி, ஜூன்27

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பெற்ற 2 கோடிரூபா பரிசு தொடர்பாக அவர் மீது வழக்குத் தொடர மத்திய புலனாய்வு அமைப்பு (சிபிஐ) முடிவு செய்துள்ளது. அது தொடர்பாக தமிழக சட்டப்பேரவைத் தலைவரின் அனுமதியைக் கோரி சி.பி.ஐ கடிதம் அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக அதிகார வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-

இது பத்தாண்டுகளுக்கு முன்னைய வழக்காகும். வருமான வரித்துறையிடம் ஜெயலலிதா தாக்கல் செய்த வருமானக் கணக்கில் 89 காசுக் கட்டளைகள் மூலமாகத் தனக்கு 2 கோடி ரூபா கிடைத்தது என்று குறிப்பிட்டுள்ளார். அதை அடுத்து வருமானவரித் துறைத் தலைவர் (புலனாய்வு) அளித்த முறைப்பாட்டின் பேரில் ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ்ஜெயலலிதா மீது முதலில் 1996 இல் வழக்கு தொடரப்பட்டது.

பின்னர் அந்த வழக்கு சி.பி.ஐக்கு மாற்றப்பட்டது.மாநில அரசின் கோரிக்கையினால் அப்போதுஅந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது. எனினும் ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால் அவர்மீது வழக்குத் தொடர தமிழக சட்டப்பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற சி.பி.ஐ. முடிவுசெய்தது.

இது தொடர்பாக சி.பி.ஐ விசாரணை நடத்தியதில் ஊழல்தடுப்புச் சட்டத்தின் கீழ் ஜெயலலிதா தவறு செய்தவராகின்றார். என சி.பி.ஐ வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே , அவர் மீது வழக்குத் தொடர பேரவைத் தலைவரின் அனுமதியை சி.பி.ஐ. கோரியிருக்கிறது என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன. (202)

## வட அமெ.தமிழர் ஏற்பாட்டில் தமிழ் மாநாடு நியூயோர்க்கில்

நியூயோர்க், ஜூன்27

வடஅமெரிக்காவில் வாழும் தமிழர்கள் சார்பில் மூன்று நாள் தமிழ் மாநாடு எதிர் வரும் முதலாம் திகதி நியூயோர்க்கில் ஆரம்பமாகிறது.இந்திய மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் மாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார்.

கனடாவை உள்ளடக்கிய வட அமெரிக்காவில் [illegible] வாழும் 2 இலட்சம் தமிழர்கள் சார்பில் [illegible]ங்கள் இயங்குகின்றன. இந்த சங்கங்களின் கூட்டமைப்பு 1987இல் தொடங்கப்பட்டது. இந்தக் கூட்டமைப்பின் ஆண்டிறுதி மாநாடு 3 நாள்கள் நடைபெற உள்ளது. இம் மாநாட்டில் நடிகர் சரத்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.அவரது மனைவி ராதிகா, பிரபல நடிகை பத்மினி, கவிஞர் வைரமுத்து, கவிஞர் அறிவொளி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர் .

வடஅமெரிக்கா முழுவதிலுமிருந்து 300 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

(202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்தர் சபைகளின் பணி தொடர்பாக உறுப்பினர்களுக்கு நீதிவான் அறிவுறுத்தல்

மத்தியஸ்தர் சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள், மக்கள் முன்வைக்கும் பிரச்சினைகளை விரைவில் விசாரணைக் கெடுத்து பக்கச் சார்பற்ற முறையில் நீதியினை வழங்க வேண்டும். இதன் மூலம் மக்களின் கால, நேர, பண விரயங்களை தவிர்த்துக் கொள்ளமுடியும்.

- இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் தெரிவித்தார்.

கரவெட்டி பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய நீதிபதி க. அரியநாயகம் மேலும் தெரிவித்ததாவது:-

மத்தியஸ்தம் செய்பவர்கள், சட்டம், ஒழுங்கை தாம் முதலில் கடைப்பிடிக்க வேண்டும். விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் போது, பக்கச்சார்பற்று உண்மையாக - நேர்மையாகத் தீர்ப்பு வழங்குதல் வேண்டும்.

விசாரணை செய்து நல்ல தீர்ப்புத் தருவார்கள் என்று நம்பிக்கையுடன் வரும் மக்களின் எதிர்பார்ப்புக்களை வீணடிக்கக்கூடாது. அவர்களது நேர, பண, கால விரயங்களை தவிர்த்து கடமையாற்றவேண்டும்.

மத்தியஸ்தர்கள் சமாதானம் செய்யமுடியாத பிரச்சினைகளை வைத்து இழுத்தடிக்காது, விரைவில் நீதிமன்றங்களிடம் பாரம் கொடுக்கவேண்டும்.

நீதிமன்றங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதால் மக்களுக்கு ஏற்படும் காலதாமதங்களை நிவர்த்திக்கவும் வேலைப் பளுவை குறைக்கவுமே பிரதேச சபைகள் மத்தியஸ்தர் சபைகளை உருவாக்கியுள்ளது. இதனைக் கவனத்திற் கொண்டு மத்தியஸ்தர்கள் செயற்படவேண்டும் - என்றார்.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதேச செயலக ஊழியர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (204- 70)

## தற்காலிக வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பி கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப் படவுள்ளன. யுத்தச் சூழ்நிலை காரணமாக இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்று தங்கியிருந்துவிட்டு தாயகம் திரும்பியுள்ளவர்களுக்கு சர்வதேச புலம்பெயர்ந்தோருக் கான அமைப்பினால் ஆஸ்திரேலிய அரசின் நிதி உதவியுடன் கோப்பாய் பிரதேச செய லர் பிரிவிலுள்ள கட்டப்பிராய், இராசவீதி ஆகிய பகுதிகளில் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்காலிக வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (204-190)

## நல்லூர் திருவிழா ஏற்பாடு குறித்த கலந்துரையாடல்

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வீ. கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மின்சார•சபை, வடபிராந்திய போக்குவரத்துச் சபை, தனியார் சிற்றூர்திப் போக்குவரத் துச் சங்கம், தொண்டர் நிறுவனங்கள் என்பவற்றை சேர்ந்தோரும் ஆலய அறங்காவல் சபையினர், மாநகர சபை பகுதியினர் மற்றும் கிளைத் தலைவர்கள்,பொலீஸ் நிலைய அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நல்லூர் ஆலய பெருந்திருவிழா ஜூலை மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்து கலாசார திணைக்களம் சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலய அனுசரணையுடன் நடத்திய குருபூசை விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் இந்து கலாசார திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் க.நாகராசா வாழ்த்துரை வழங்குவதையும் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன், ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சபாவாசுதேவ சர்மா, கந்த சத்தியதாசன், செல்வி க.சிவயோகராணி மற்றும் சிறார்கள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மாணவிகள் ச.ஜனனி, ச.ஜெயதரணி, சி.சுகந்தினி ஆகியோர் பண்ணிசை பாடுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.
*(படங்கள் : கோண்டாவில் செய்தியாளர்)*

## சுனாமி மற்றும் யுத்த அனர்த்தத்தால் பாதிப்படைந்தோருக்கு உதவித் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

ஆழிப்பேரலையாலும் போர் அனர்த்தத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சேவாலங்கா மன்றம் சமூக முன்னேற்றத்துக்கான பல மீள் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனம் கிராம புனரமைப்புத் திட்டம், சூழலைப் பேணல், விலங்கு வேளாண்மை, மலசலகூட வசதிகள் ஏற்படுத்தல், வீதிகள், கிணறுகள் அமைத்தல் போன்ற மக்களுக்கு நம்பிக்கையூட்டும் பல திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக யாழ்.மாவட்டத்தில் காட்டுப்புலம், கோயிலாக்கண்டி, குட்டியப்புலம் ஆகிய கிராமங்களின் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியடைந்து வருவதாக அந்நிறுவனத்தின் யாழ்.இணைப்பாளர் சுகுணராஜ் தெரிவித்தார்.

இதேபோன்ற பல திட்டங்கள் எதிர்காலத்தில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (204-ரி)

## கனிஷ்ட விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டதாக தெரிவிப்பு

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இன்றும் நாளையும் மாவட்ட மட்டத்தில் நடைபெறவிருந்த கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வன்மைப்போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கச் செயலாளர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இப்போட்டிகள் இடம்பெறும் திகதிகள் பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் -

சங்கத் தலைவர் அல்லது செயலாளரை முறையே 0776569382 மற்றும் 0777426924 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - அவர் மேலும் கூறியுள்ளார்.

## குமுதினி படகுச் சேவை இடைநிறுத்தம்

நல்லூர்,ஜூன்27

நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் குமுதினிப் படகு பழுதடைந்த காரணத்தால் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக்கான கடல் வழிப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட குமுதினிப் படகு பழுதடைந்துள்ளது. திருத்த வேலைக்காக இப்படகு கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக நெடுந்தீவில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க படகு நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இப்படகின் பழுதடைந்த பாகங்களுக்காக புதிய உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள போதும் அதற்கான நிதி வவுனியாவில் உள்ள திணைக்களத்தில் இருந்து யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கிடைக்கவில்லை. இதனால் இந்த உதிரிப் பாகங்களை பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாக வும் இதனால் படகுத் திருத்தப் பணிகள் தாமதமடைவதாகவும் தெரிவிக்கப்படுகி றது. (111)

## வீதிகளைத் திருத்த நிதியில்லை: அதிகார சபை அதிகாரி கவலை

நல்லூர், ஜூன்27

குடாநாட்டின் வீதிகள் பல சேதமடைந்துள்ளன. இதனை திருத்தியமைப்பதற்கு போதிய நிதி கிடைப்பதில்லை. இவ்வாறு யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் ச.சிவலிங்கராஜா கவலை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டின் வீதிகளை புனரமைப்புச் செய்வதற்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைப்பதில்லை. இதனால் பராமரிப்பு நிதியில் இருந்தே புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் கடல் நீர் உட்புகுந்து வருகிறது.

இந் நீரை வெளியேற்றுவதற்கு வடக்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அணையின் ஒரு பகுதி திறக்கப்படவுள்ளது. இந்த வேலைக்கான செயற்பாடுகள் பராமரிப்பு நிதியின் மூலமே மேற்கொள்ளப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (111)

## தன்னார்வ நிறுவனத்தில் திருட்டு

ஏறாவூர் பொலீஸ் பிரிவின் தன்னாமுனைக் கிராமத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனமொன்றில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தன்னாமுனை 'ஸ்டெப்' அரச சார்பற்ற நிறுவனத்தின் பிளாஸ்டிக் கதிரைகள் 22, ஸ்டூல்கள் 13, பெட் மின்ரன் பந்துகள், வலைப்பந்தாட்ட உபகரணங்கள், டென்னிஸ் விளையாட்டு உபகரணங்கள் என் பவைகளே திருடப்பட்டிருக்கின்றன என நிறுவனத்தின் பணிப்பாளர் அலோஷியஸ் மாசிலாமணி ஏறாவூர் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றிருக்கிறது எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கொள்ளைச் சம்பவம் தொடர் பில் தாம் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்த்தனர் எனவும், அரச சார்பற்ற நிறுவனத்தின் பின்புறக் கதவு உடைக்கப்பட்டே கொள்ளை இடம்பெற்றிருப்பதாகவும் ஏறாவூர் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவின் சார்ஜன்ட் வை. அல்பர்ட் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்தவாரம் ஏறாவூர் பிரதேசத்தில் இரு நகைக் கடைகளில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாகவும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-134)

## முஸ்லிம்களின் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை அரசியல் லாபங்களுக்கு பயன்படுத்தக் கூடாது

### ஜனாதிபதியின் ஆலோசகர் நஸிர் அஹமட் கருத்து

''முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை அரசியல் லாபங்களுக்காக மாற்றிக் கொள்ளாமல் சமூக பிரச்சினையாகக் கருதி அவற்றுக்குத் தீர்வுகாண சமூகத்தலைவர்கள் முன்வரவேண்டும்''

- இவ்வாறு முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கொழும்பு - மருதானை 'டவர்' மண்டபத்தில் நடைபெற்ற கொட்டாஞ்சேனை கைரியா அஹதியா பாடசாலையின் 48 ஆவது வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அஹதியா பாடசாலையின் அதிபர் இஸ்ஸதீன் செய்னுலாப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஹாபீஸ் நஸீர் அஹ்மட் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சமூகத்தினுடைய பொதுவான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் அபிலாஷைகளைப் பெற்றுக்கொள்வதில் முஸ்லிம் தலைவர்கள் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாகச் செயற்பட காத்திரமான பங்களிப்புகளைச் செய்யவேண்டும்.

முஸ்லிம்கள் கல்வித்துறையில் புறக்கணிக்கப்பட்டு பல்வேறு பின்னடைவுகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். இது மாற்றப்படவேண்டும். கல்வியில் சாதனைகளைப் படைக்கின்ற சமூகமாக முஸ்லிம் சமூகம் மாறவேண்டும்.

குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் முஸ்லிம்களின் கல்வி நிலையில் நிறைய மாற்றம் செய்யப்படவேண்டும். இதற்கு நன்கு திட்டமிட்ட செயல்திட்டமொன்று வகுக்கப் படவேண்டும்.

கொழும்பு மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் கல்வி, சுகாதா[illegible] வசதி, வீதி புன[illegible]மைப்பு போன்ற அடிப்படை வசதிகள் கூட சீர் செய்யப்படாத நிலைகளிலேயே இருக்கிறது.

உலகிற்கு நாகரிகத்தைக் கற்றுக்கொடுத்த இஸ்லாமிய சமூகம் இன்று நாகரிகம் என்ற போர்வையில் அநாகரிகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இவ்வாறான விடயங்களில் சமூக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும். சமூக சீர்திருத்த விழிப்புணர்ச்சிகளை ஏற்படுத்துவதில் அஹதியா பாடசாலைகளுக்குப் பாரிய பொறுப்பு இருக்கிறது. அஹதியாவில் மார்க்க கல்வி பெறுகின்ற மாணவர்கள் சமூகத்தில் புரட்சித் தடயங்களை ஏற்படுத்தவேண்டும்.

அஹதியாவின் செயல்பாடுகளும், பாடத்திட்டங்களும் நாடு முழுவதும் விஸ்தரிக்கப்படவேண்டும். சகல முஸ்லிம் கிராமங்களிலும் அஹதியா பாடசாலைகள் நடத்தப்படவேண்டும். அஹதியாவின் வளர்ச்சிக்குத் தேவையான வசதிகளையும், பங்களிப்புகளையும் முஸ்லிம் தேசிக் கூட்டமைப்பு வழங்கும் - என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி - மட்டுவில் கிழக்கு
# அருள்மிகு ஸ்ரீ ஆனைக்கார ஞானவைரவர் தேவஸ்தானம்
## நூதன ஆலய சம்புரோஹண அஷ்டபந்தன
# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**விய வருடம் ஆனித்திங்கள் 14ஆம் நாள் 28-06-2006**
**புதன்கிழமை காலை 5.55 - 7 மணிவரை.**



பரமனை மதித்திடா பங்கையாசனன்
ஒருதலை கிள்ளியே உயர்ந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்

**ஸ்ரீ ஆனைக்கார ஞானவைரவப் பெருமான் அடியார்களே!**

*ஸ்ரீபத் தஷிண கைலாசம் என வழங்கப்பெறுவதும் திருமூல நாயனாரால் போற்றப்பட்டதுமான இலங்கா துவீபத்தின் வடபால் பலம் மிகுந்து விளங்கும் யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பதியில் கண்போல் விளங்குவதும் சைவத்துடன் தமிழ் தளைத்தோங்குவதும் மட்டுவில் கிழக்குப் பதியில் பல்லாண்டு காலமாகத் தம்மை வழிபடும் அடியார்களின் இன்னல்களை நீக்கி அவர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை வாரிவாரி வழங்கும் அருள் வள்ளலாகிய ஸ்ரீ ஆனைக்கார வைரவப் பெருமானுக்கும் ஏனைய பரிபாலன மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகர வருடமான விய வருடம் ஆனித்திங்கள் 14ஆம் நாள் [28.06.2006] புதன்கிழமை பூர்வபக்ஷ திருதியை திதியும் பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 5.55 - 7.06 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில் சம்புரோஹண அஷ்ட பந்தன மஹாகும்பாபிஷேகம் நிகழ எம்பெருமான் திருவருள் பாலித்துள்ளார். இக்கும்பாபிஷேக பெருவிழாவிலும் அதற்கு முன் நடைபெறவுள்ள சகல கிரியா நிகழ்வுகளிலும் பின் நடைபெற வுள்ள மண்டலாபிஷேக நிகழ்வுகளுக்கு அடியார்கள் ஆசார சீலராய் வருகைதந்து எம்பெருமானின் இஷ்ட சித்தி களைப் பெற்றுய்யும்வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.*

**கிரியா கால நிகழ்வுகள்**

*ஆனி மாதம் 12ஆம் நாள் (26-06-2006) திங்கட்கிழமை பகல் 9.30 மணிக்கு மேல் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகின.*
*ஆனி மாதம் 13ஆம் நாள் (27-06-2006) செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும்.*
*ஆனி மாதம் 14ஆம் நாள் (28-06-2006) புதன்கிழமை அதிகாலை 4 மணிமுதல் யாக பூசை, ஹோமம், மஹா பூர்ணாகுதி, தீபாராதனை , சர்வமங்கள வாத்திய சகிதம் கும்பங்கள் வீதிப்பிரதட்சணம் காலை 5.55 மணிமுதல் 7.06 மணிவரையுள்ள மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் இடம்பெறும்.*

ஆலய பிரதம குருக்கள்:
**சிவஸ்ரீ சு.முருகதாஸ் குருக்கள்** தலைமையில்
கும்பாபிஷேக பிரதம குரு:
*''கிரியா சிரோண்மணி''*
**சிவஸ்ரீ சி.மகேந்திரநாதக்குருக்கள்**
*(தம்பசிட்டி மாயக்கயம்பதி சித்திர விநாயகர் தேவஸ்தான பிரதம்குரு)*
மங்கள இசை:
**தென்மராட்சி புகழ் - திரு.பாபு குழுவினர்** *(சாவகச்சேரி)*
கட்டட நிர்மாணம்:
**திரு.சொர்ணலிங்கம் நவரட்ணராஜா குழுவினர்** *(மட்டுவில்)*
கூரை நிர்மாணம்:
**திரு.கந்தையா தங்கராசா குழுவினர்** *(மட்டுவில்)*
வர்ண வேலை:
**திரு.பா.பிரதீப் குழுவினர்** *(மட்டுவில்)*

**கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 24 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். இதற்குத் தேவையான சமித்துக்கள், பால், தயிர், இளநீர், பழ வகைகள், பூ, பூமாலைகள், அன்னதானப் பொருள்களையும் தந்துதவி சிறப்பித்து வைரவப் பெருமானின் திருவருளைப் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ்வீர்களாக!**

**'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'**

**மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.** **- ஆலய பரிபாலன சபையினர்.**

**விளம்பர அனுசரணை:**

**கவி போட்டோ அன் வீடியோ**
மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.
0776166870

**ஜெனா கிறசர்**
கனகம்புளியடி றோட்,
சாவகச்சேரி.

**சண்முகா கிறசர்**
கனகம்புளியடி, வேம்பிராய் றோட்.

**சுகந்தினி ரவல்ஸ்**
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

**சோபனா நகைமாடம்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிறி நதியா நகை மாளிகை**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


**சிறிமுருகன் பல்பொருள் வாணிபம்**
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(51603) (24-11-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலவர்கள் போற்றிப் புகழ்ந்த பண்டிதமணி

*இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நூற்றேழாவது (107) பிறந்ததினம் இன்றாகும். அதை யொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.*



ஈழமணித் திருநாட்டினை அலங்கரித்த தலையாய புலவர்களில் ஒருவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஆவார்.

*'ஆடிப் பிறப்பொடு கத்தரித் தோட்டமும்
ஆக்கி அளித்த புலவர் பிரான்'*

என்று புலவரவர்களைப் பாராட்டியுள்ளார் பண்டிதமணி அவர்கள். ''புலவர் பிரான்'' என்ற தொடர் அர்த்த புஷ்டி வாய்ந்தது.

தங்கத் தாத்தா நவாலியூர் புலவரவர்களின் கவிதாசாமர்த்தியத்தை கட்டுரைகள், கவிதைகள் மூலம் நிறைவு செய்தவர் பண்டிதமணி அவர்கள். ''வண்டமிழிதமறி பண்டித மணியே'' என்று வாயார வாழ்த்தினார் புலவர் மணி அவர்கள். புலவரது வாழ்த்தின் கனதி இருந்தவாறு!

**கி.வா.ஜ. அவர்கள்**

தமிழர் தாயகத்தில் தமிழ்த் தாத்தா என்று பெருமையுடன் வாழ்ந்தவர் டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள். அவரது மதிப் பார்ந்த மாணவர்களில் ஒருவர் வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதையர் அவர்கள். கலைமகள் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய கி.வா.ஜ அவர்கள் இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இலக்கியப் பாலமாக விளங்கியவர். யாழ்ப்பாணம் வரும்பொழுது தவறாமல் பண்டிதமணி அவர்களைச் சந்திப்பது வழக்கம்.

திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள பண்டிதமணி அவர்களுடைய குடிலுக்கு வந்து சேர்ந்தவுடன் ''உங்களைக் கண்டு கொண்டு போகவந்தேன்'' என்று புன்முறுவல் பூத்த முகத்துடன் பண்டிதமணி அவர்களை நோக்கியவாறு கூறுவார். கண்டு - கற்கண்டு பண்டிதமணி அவர்களும் கற்கண்டை எடுத்து கி.வா.ஜ.ஐயாவிடம் அன்போடு கொடுப்பார். கற்கண்டை வாயிலே போட்டபடி சம்பாஷணையை ஆரம்பிப்பார் ஐயர் அவர்கள். இலக்கிய மேதைகளான இருவர் பெரியார்களதும் சம்பாஷணையை யான் கேட்டிருக்கிறேன். கேட்பதற்குச் சர்க்கரைப் பந்தரிற் தேன்மாரி பொழிந்தது போல இருக்கும் அவர்களது சம்பாஷணை.

இலங்கைப் பல்கலைக்கழகம் பண்டிதமணி அவர்களுக்கு இலக்கிய கலாநிதி என்ற விருதினை வழங்கிக் கௌரவித்தது. இலங்கைத் தமிழர் வரலாற்றில் இவ்வாறானதொரு விருதினை முதன்முதற் பெற்ற பெருமையும் பண்டிதமணி அவர்களுக்கே உரியது. பண்டிதமணி அவர்கள் பெற்ற பெருமையை உலகமே கண்டு மகிழ்ந்தது.

**பண்டிதர் பூபாலபிள்ளை**

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக இருந்தவர் பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்கள். யாழ்ப்பாணத்தவர்களுக்கும் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பண்டிதமணி அவர்களது அபிமானத்துக்கு உரியவர். பண்டிதமணி அவர்களது உயர்வு கண்டு பெருமிதமடைந்து வாழ்த்தியுள்ளார்.

*''கற்றவரும் மற்றவருங் காதலித்துக் கேட்பதற்கு
நற்றமிழிற் சொற்பொழிவு நாட்டமுடன் - பொற்புறவே
ஊரெல்லாங் கேட்க உவப்புறவே செய்வோன் சீர் சீரிலான் செப்புவதோ தேர்ந்து''*

என்கின்றார் மட்டுநகர் பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்கள்.

**அருட்கவி**

1948 ஆம் ஆண்டு ஆண்கள் 25 பேரும் பெண்கள் 25 பேருமாக 50 பேர் சைவாசிரிய கலாசாலைக்கு ஆசிரியப் பயிற்சிக்குத் தெரிவானார்கள். அவர்களில் ஒருவர் அளவெட்டியைச் சேர்ந்தவர். பெயர் சீனியர் விநாசித்தம்பி அவர்கள். ஆசிரிய கலாசாலையில் பாடவேளை தவிர்ந்த நேரங்களில் ஒரு மூலையில் இருந்து எழுதிக்கொண்டே இருப்பார். இவர் எப்பொழுதும் என்ன எழுதிக் கொண்டிருக்கின்றார் என்று அறியும் ஆவல் பண்டிதமணி அவர்களுக்கு ஏற்பட்டது.

விநாசித்தம்பி அவர்களை அழைத்து எழுதியவற்றை வாங்கிப் பார்த்தார். கவிதைகள், கட்டுரைகள், நாடகங்களாக இருந்தன. பண்டிதமணி அவர்கள் திரு.விநாசித்தம்பி அவர்களைப் பார்த்து 'உமக்குக் கவிதைகள் நன்கு வரும்போல இருக்கிறது. பாடல்களை நிறைய எழுதுங்கள்'' என்றார். குருத்தேவர் தமது மாணவரைப் பார்த்துக் கூறிய ஆசி, கவிதை உலகில் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் என்று உயர்த்தி வைத்தது. குருதேவரை வாழ்த்துகின்றார் அருட்கவி அவர்கள்.

*சால்பெனும் நெறியைக் காணச்
சகமெலாம் தேடி னேன்நின்
பால்வரக் கிடைத்த ஞான்ற பண்டித
- மணியே நின்றன்
நூல்வழி வாக்கில் நோக்கில்
நுழை புலப் போக்கிற் சைவப்
பால்பொழி மாரி கண்டுன்
பதமலர் சிந்தை வைத்தேன்.*

என்று பாடி மகிழுகின்றார்கள் விநாசித் தம்பி புலவர் அவர்கள்.

**முதுபெரும் புலவர்**

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர்களில் ஒருவர் இணுவையூர் திரு.வை.க.சிற்றம்பலம். சைவாசிரிய கலாசாலையில் மும்மணிகளெனத் திகழ்ந்த அதிபர் மயிலிட்டி சி.சுவாமிநாதன், உப அதிபர் மௌன தவமுனிவர் பொ.கைலாசபதி, தமிழ்த்துறைத் தலைவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோர் மூவரையும் மும்மூர்த்திகளாக நினைத்து இன்றும் வழிபடுகின்றவர். இவர்களது கவிதைப் பெருக்குக்கு வழிகாட்டியாயிருந்தவரும் பண்டிதமணி அவர்களே. முதுபெரும் புலவர் என்ற பட்டத்தினைப் பெற்றவர். கலாபூஷணம் விருதினை இவருக்கு அரசு அளித்துக் கௌரவித்துள்ளது. பலநூறு பாடல்களைப் பாடிய பெருமை முதுபெரும் புலவருக்குண்டு. பண்டிதமணி அவர்கள் பெயரில் ஒரு நூலே செய்திருக்கிறார் முதுபெரும் புலவர் அவர்கள். நூலின் பெயர் ''பண்டிதமணி நான்மணி மாலை'' என்பதாம். குறித்த நான்மணி மாலையைப் படிப்பவர்கள் முதுபெரும் புலவர் அவர்கள் பண்டிதமணி அவர்கள் மீது கொண்டிருக்கும் முறுகிய பக்தியை உணரலாம். நூல் பற்றிக் குறிப்பிடுகையில்:-

*''செந்தமிழர் செய்த சிறந்த தவப் பயனால்
வந்துதித்த பண்டித மாமணியைச்
- சிந்தித்தே
நாவலராய்ப் பாரதியாய் நானேத்திக்
கூடலுறை
தேவருமாய்ப் பாடுவேன் தேர்ந்து.*

என்கின்றார் முதுபெரும் புலவர் அவர்கள்.

இவ்வாறு புலவர் பெருமக்களால் புகழ்ந்து பாடப்பெற்ற பெருமைக்குரியவர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். பண்டிதமணி அவர்களது புகழ் உலகுள்ள வரை நிலைத்து நிற்கும்.

**- ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்**

# 'வாழுங்கணங்கள்' ஒளிப்படத் தொகுதி கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது

கிளிநொச்சி,ஜூன்27

கிளிநொச்சியில் ச.அமரதாசின் ''வாழுங் கணங்கள்'' ஒளிப்படத் தொகுதி வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நுண்கலைக் கல்லூரிகளின் பணிப்பாளர் தணிகைமாறன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியினை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மாவீரரின் பொதுப்படத்திற்கான சுடரினை தமிழீழ கல்விக் கழகப்பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைக்க பொதுப்படத்திற்கான மலர்மாலையினை கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா அணிவித்தார்.

ஒளிப்படத் தொகுதிக்கான வெளியீட்டு உரையினை தமிழீழ கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

ஒளிப்படத் தொகுதியின் முதற் பிரதியினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வெளியிட்டு வைக்க, தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை புதுவை இரத்தினதுரை, நா.தமிழன்பன், மூத்த போராளி யோகரட்ணம் யோகி, சோ.தங்கன், மூத்த அரசறிவியலாளர் மு.திருநாவுக்கரசு ஆகியோர் வழங்கினர்.

சிறப்புரையினை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரனும் ஆய்வுரையினை ஆய்வாளர் நிலாந்தனும் நிகழ்தினர். ஒளிப்படம் பற்றிய கருத்துரையினை புலிகளின்குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் நிகழ்த்தினார். ஏற்புரையினை ஆசிரியர் அமரதாஸ் நிகழ்த்தினார். (203-405)




# மீனவர்களுக்கு வலைத்தொகுதிகள்

வட்டக்கச்சி,ஜூன்27

முல்லைத்தீவில் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 'கரித்தாஸ் - கியூடெக்' நிறுவனத்தினின் ஏற்பாட்டில் வலைத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வலைத் தொகுதிகளைக் கையளிக்கும் நிகழ்வு செல்வபுரத்தில் உள்ள கரித்தாஸ் நிறுவனத்தில் நடைபெற்றது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 30 பயனாளிகளுக்கு வலைத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

'கரித்தாஸ்-கியூடெக்' நிறுவனத் திட்ட இணைப்பாளர் ரட்ணா, சமாசப் பிரதிநிதிகள் ஆகியோர் வலைத் தொகுதிகளைப் பயனாளிகளிடம் கயளித்தனர். (203-405)

# தற்காப்புப் பெற்றவர்களின் மரதன் ஓட்டப்போட்டி முடிவுகள்

வட்டக்கச்சி, ஜூன்27

உருத்திரபுரம் சுரேஷ் பயிற்சிப் பாசறையில் தற்காப்புப் பயிற்சி பெற்றவர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை உருத்திரபுரம் வடக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் இசைப்பிரியன் ஏற்றினார்.

விளையாட்டு நிகழ்வுகளை தமிழீழ நுண்கலைப் பிரிவுப் பொறுப்பாளர் தாசன் ஆரம்பித்து வைத்தார்.

இப்போட்டிகளில் மரதன் ஓட்டம் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

18 - 35 வயது ஆண்கள் - ந.ரவிக்குமார், சி.குணேஸ், சீ.சதீஸ்.

35 - 50 வயது ஆண்கள் - மு.ஜெகநாதன், வே.வணலராசா, சற்குணகுமார், ஆ.கிருஷ்ணபிள்ளை, தே.ஸ்ரீதேவன்.

18 -35 வயதுப் பெண்கள் - சி.ரேணுகா, ந.இராஜேஸ்வரி, வி.சயோதினி, வ.கிறிஸ்ரின் மலோஜினி, மு.விமலஜோதி.

35-50 வயதுப் பெண்கள் - ந.இராஜேஸ்வரி, ச.ஜோகேஸ்வரி, ச.சந்திரவதனா, மு.புஸ்பராணி, இ.பெல்சியா.

50 - 70 வயதுப் பெண்கள் - க.லலிதாம்பாள், வை.கௌசலா. (203-405)

# 'உயிர்நெய்தவாழ்வு' நூல் வெளியீடு

கிளிநொச்சியில் கவிஞர் வேலணையூர் சுரேசின் 'உயிர்நெய்தவாழ்வு' கவிதை நூல் கடந்த புதன்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இந்நிகழ்வு நடைபெற்றது.

பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகமும், தமிழீழத் தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி நகுலனும் ஏற்றினர்.

விழாச் சுடர்களை கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் ராணிமைந்தன், இளையோர் மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் நரேன் ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

விடுதலைப் போராட்டத்தின் சமகால வாழ்வின் அனுபவங்களை தன் படைப்புகள் ஊடாக வழங்கி வருகின்றார் வேலணையூர் சுரேஸ். விடுதலையின் வீச்சாக கவிதை, இன்னமும் வீரியம் அடையவேண்டும் என்று பாலகுமாரன் தனதுரையில் தெரிவித்தார்.

இதனையடுத்து வெளியீட்டு உரையினை ராணிமைந்தன் நிகழ்த்தினார்.

நூலை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வெளியிட, அதனை தளபதி நகுலன் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை கிளிநொச்சி அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அருண் வழங்கினார்.

தொடர்ந்து மதிப்பீட்டுரையை விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, தூயவன் அரசறிவியற் கல்லூரி முதல்வர் அரசண்ணா, புலிகளின் குரல் நிகழ்ச்சி அமைப்பாளர் ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோரும் ஏற்புரையினை நூல் ஆசி ரியரும் நிகழ்த்தினர்.

(203-352)





'உயிர்நெய்தவாழ்வு' நூல் வெளியீட்டு நிகழ்வின் போது தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் நூலை வெளியிட்டு வைக்க அதனை தளபதி நகுலன் பெற்றுக்கொள்வதையும் - கவிஞர் புதுவை இரத்தினதுரை மதிப்பீட்டுரை நிகழ்த்துவதையும் க.வே.பாலகுமாரன் சிறப்புரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying

யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத்துறை பட்டம் உடனடி அனுமதிகள்

Vitebsk
State Medical University



இலங்கை மருத்துவ சபை
உலகசுகாதார ஸ்தாபனம்
ஜி.எம்.சி. அங்கீகாரம் பெற்றது.

பேராசிரியர் வை.அலெக்சீன்கோ M.D., Ph.D.
வெளிநாட்டு மாணவர் அனுமதிப் பிரிவுத் தலைவர் மற்றும் நரம்பியல், நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவுத் தலைவர்

தற்பொழுது இலங்கையில் இருக்கிறார்.

**மருத்துவத்துறை கலாநிதி எம்.டி..**
ஆங்கில மொழி மூலம்
பெறுபேறு எதிர்பார்ப்போரும் விண்ணப்பிக்கலாம்.
உடன் அனுமதி வல்ல அமைப்பு
கொழும்பு PATHE கல்வி நிறுவனம்- 25 ஜூன் மு.ப. 9
கண்டி - ஹோட்டல் சுவிஸ்ஸி - ஜூன் 29 மு.ப. 9.30
மட்டக்களப்பு - சுபாராஜ் உணவகம் - ஜூன் 30 மு.ப 9.30
கருத்தரங்கையடுத்து உடன் அனுமதி தொடரும்.
உடன் அனுமதி தொடர்பான நேர்காணல்களுக்கும் மேலதிக தகவல்களுக்கும் தொடர்புகொள்க. 0773017883

PATHE ACADEMY
Overseas Student Placement Department
37, School Lane, Colombo 03. 2502012, 5377752 , 2591271


## சஞ்சிகை வெளியீடு

தென்மராட்சி, ஜூன்27

தென்மராட்சி கல்வி அலுவலகத்தினால் காலாண்டுக்கு ஒருமுறை பிரசுரிக்கும் 'சிறகு' சஞ்சிகை இல.2 அண்மையில் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்தினால் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வெளியிடப்பட்ட சஞ்சிகை பிரதேசத்தில் உள்ள திணைக்கள அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (117)

## மன்னாரில் சூடு: கான்ஸ்டபிள் காயம்

மன்னார் பொதுவிளையாட்டரங்கச் சந்தியில் உள்ள காவலரணில் கடமையிலிருந்த பொலிஸார்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு 8.10 மணியளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மன்னார் பொது வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் இரவு 8.50 மணியளவில் அம்புலன்ஸ் மூலம் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இதேவேளை, இச் சம்பவத்தில் ஓட்டோ சாரதி ஒருவரும் படுகாயமடைந்துள்ளார். பொது விளையாட்டரங்குச் சந்திப்பகுதியில் காவலரண் மீது நடந்த தாக்குதலை அடுத்து படையினர் பலத்த துப்பாகிச்சூடு நடத்தினர் எனத் தெரியவந்துள்ளது. (க - ரி)

## சமய சந்நிதிகளில்

பொலிகண்டி கந்தவனம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி மாலை 5 மணிக்கு சப்பரத் திருவிழாவும் மறு நாள் முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் அடுத்த நாள்காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204)

* * *

கைதடி இணுங்கித் தோட்டம் கந்த சுவாமி ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை காலை 9.21 மணிக்கு நடைபெறவுள்ளது.இந்தக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று காலை 8 மணிமுதல் எண்ணெய்க்காப்பு சாத்தல் இடம்பெறும். (204)

உ
குகமயம்

# தீக்ஷை முகூர்த்தப் பத்திரிகை

நிகழும் சுப மங்களகரமான விய வருஷம், ஆனித்திங்கள் 14 ஆம் நாள் (28.06.2006) புதன்கிழமை பூச நட்சத்திரமும் திருதியை திதியும் சித்தயோகமும் கூடிய காலை 7 மணி முதல் 8.50 வரையுள்ள சுபவேளையில்

**தீட்சை பெறுபவர்**

*காரைநகர்- கிழவன்காடு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான பரம்பரை ஆதீன பிரதமகுரு குகஸ்ரீ* **ப.ஆறுமுகக் குருக்கள்** *அவர்களின் பேரனும் சாவகச்சேரி மட்டுவில் வடக்கு அருள்மிகு மருதடி - தான்தோன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பரம்பரை ஆதீன பிரதமகுரு (அமரர்)* **அ.பொன்னுத்துரைக்** *குருக்களின் பேரனுமாகிய*

**எமது ஏக புத்திரன் திருநிறை செல்வன்**
**சிரஞ்சீவி ச.முகுந்தன் ஐயாவுக்கு (கண்ணன்)**

அவர்களுக்கு சமயதீட்சை, விசேடதீட்சை ஆகியன இடம்பெற திருவருளும் குருவருளும் கைகூடியுள்ளன.

**தீட்சாகுரு:** சிவாகம கிரியா கலாநிதி , ஆகமக் கிரியா தத்துவநிதி, அருள்ஞானக்கிரியா மணி, கிரியாஜோதி
**சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள்**

**பிரதமகுரு:** *ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில் கொம்மந்தறை.*

**இடம்:** *சாவகச்சேரி -மட்டுவில் வடக்கு மருதடி ஸ்ரீ தான்தோன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்*

அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது மகனை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வரவேற்பாளர்கள்: சோதிட பூஷணம், சிவாகம சித்தாந்த பண்டிதர்
**சிவஸ்ரீ பொ.லக்ஷநாமதாச குருக்கள் தம்பதிகள்**
*பிரதம பரம்பரைக்குரு மருதடி ஸ்ரீதான்தோன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.*

ஆறு. சங்கர நாராயணக்குருக்கள் ச.வல்லவாம்பாள் தேவி தம்பதிகள்
பரம்பரை ஆதீனம், காரைநகர் கிழவன்காடு அருள் மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



யா/குருநகர் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் சங்கீத ஆசிரியை திருமதி சுகந்தநாதன் நிர்மலா அவர்களின் தந்தை


**ஜேக்கப் செபஸ்ரியாம்பிள்ளை**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா இறைவன் அடி சேர பிரார்த்திக்கின்றோம்.

யா/சென்.ஜேம்ஸ் ம.வி.
சமூகம்.

(51208)(21.11.17)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| அமரர் **முருகேசு சண்முகலிங்கம்** | அமரர் செல்வன் **சண்முகலிங்கம் காந்தரூபன்** | அமரர் திருமதி **சண்முகலிங்கம் பரமேஸ்வரி** |
|---|---|---|
| அன்னை மடியில்: 1941-03-28 | அன்னை மடியில்: 1983-02-11 | அன்னை மடியில்: 1951-04-11 |

ஆண்டவன் அடியில்: 2006.05.13

*பாசமிகு நெஞ்சங்களே நீவீர்*
*பாரினிலே எம்மை பிரிந்து*
*வேறுலகம் சென்றதேனோ....?*
*பண்பாளன் சண்முகலிங்கமே - நீவீர்*
*பதிவிரதை பரமேஸ்வரி சகிதம்*
*கண்ணியவான் காந்தரூபனையும்*
*அழைத்துச் சென்றதேனோ...?*

வியவருடம் சித்திரைத் திங்கள் 30ஆம் நாள் (13.05.2006) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்குகளின் வீட்டுக்கிரியைகள் நாளை (28.06.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் மேற்படி கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அன்றைய மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நடராஜா வித்தியாலயம் அருகில்,
புளியங்கூடல்.

-குடும்பத்தினர்.

(51614)(21.11.17)

# ஆண்டொன்றும் ஆனதுவோ....

மண்ணில் 30 - 01 - 1924



விண்ணில் 08 - 07 - 2005

அமரர் **சின்னத்தம்பி மார்க்கண்டு**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
*திதி: துதியை 27.06.2006*

ஆண்டொன்றும் ஆனதுவோ அவனியில் அகன்று
மாண்டவர் மீண்டதில்லை மானிடர் மாயையது
தூண்டிடும் நினைவின் அலைகள்
துயர் தீர்த்து வைத்திடுமோ
வேண்டுதல் செய்வோம் ஐயா,
வெவ்வினைகள் தீர்ந்திடவே...

34/6,புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(51577)(21.17.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி

# அதிரடி கோல் போட்டார் பெக்காம் ஈக்குவடோரின் கனவு கலைந்தது!

ஜேர்மனி, ஜூன் 27

இங்கிலாந்து அணியை காலிறுதிக்கு தனி ஆளாக அழைத்துச் சென்றார் அணித்தலைவர் டேவிட் பெக்காம். தடையற்ற உதை வாய்ப்பின் மூலம் இவர் அருமையான கோல் அடிக்க, இங்கிலாந்து அணி ஈக்குவடோரை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. பரிதாபத் தோல்வி அடைந்த ஈக்குவடோர் தொடரில் இருந்து வெளியேறியது.

நேற்றுமுன்தினம் ஸ்டட்கார்ட்டில் நடந்த 'நொக்-அவுட்' முறையிலான இரண்டாம் சுற்று ஆட்டத்தில் முன்னாள் சம்பியன் இங்கிலாந்தும், தென் அமெரிக்காவின் ஈக்குவடோரும் மோதின.

முதல் பாதியில் ஈக்குவடோர் மெல்ல, மெல்லத் தாக்குதலை ஆரம்பித்தது. ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் அந்த அணிக்கு அருமையான வாய்ப்புக் கிடைத்தது. ஜான் டெர்ரி தலையால் முட்டிய பந்து நழுவ, அதை ஈக்குவடோரின் கார்லஸ் டெனோரியோ தட்டிவிட , பதற்றம் எகிறியது. ஆனால், இவர் ஆமை வேகத்தில் பந்தை நகர்த்தி அடிக்க, அதற்குள் பெனால்டி பகுதிக்கு விரைந்து வந்த இங்கிலாந்தின் ஆஷ்லி கோல் பந்தை தட்டி விட, கோல்க் கம்பத்தில் பட்டு வெளியே சென்றது. டெனோரியோவின் தாமதத்தால் ஈக்குவடோர் அரிய வாய்ப்பை இழந்தது.

ஐரோப்பாவின் அனுபவ இங்கிலாந்தைப் பொறுத்த வரை முதல் பாதியில் மந்தமாக ஆடியது. காயம் அடைந்த மைக்கல் ஓவன் இல்லாததால் முன் களத்தில் வெய்னி ரூனி மட்டுமே போராடினார். ஒட்டு மொத்தமாக பார்த்தால் இரு அணிகளும் ஆட்டத்தை முடிக்கும் திறன்



இல்லாமல் தவித்தன. நீண்ட பந்துப் பரிமாற்றம் செய்தும் பலன் கிடைக்கவில்லை. பின்னர் முரட்டு ஆட்டத்துக்கு மாறிப் பார்த்தனர். இதனால் ஈக்குவடோரின் வாலன்சியா, கார்லஸ் டெனோரியோ மற்றும் இங்கிலாந்தின் ஜான் டெர்ரி மஞ்சள் அட்டை பெற்றனர். இரு அணிகளும் ஏனோ தானோ என்று ஆட, முதல் பாதியில் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

இரண்டாவது பாதியில் இங்கிலாந்து வீரர்கள் துடிப்பாக ஆடினர். ஆட்டத்தின் 60ஆவது நிமிடத்தில் அணித்தலைவர் பெக்காம் மாயாஜாலம் காட்டினார். இம்முறை தடையற்ற உதை வாய்ப்புக் கிடைக்க அதை அடித்தார். பெக்காம். ஈக்குவடோர் வீரர்களின் தடுப்புச் சுவரை கடந்து பந்து உயரே பறக்கிறது. பந்து வலையை நோக்கி இறங்குகிறது. அதை கண் அசராமல் பார்த்த ஈக்குவடோர் கோல் காப்பாளர் கிறஸ்டியன் மோரா அப்படியே படுத்துத் தடுக்கிறார். அவரது விரல்களில் பட்ட பந்து வலைக்குள் சென்று விட... பெக்காம் உள்ளிட்ட இங்கிலாந்து வீரர்கள் ஆனந்தத்தில் ஆட்டம் போட்டனர். தனி ஆளாக பெக்காம் சாதிக்க, இங்கிலாந்து 1-0 என்ற முன்னிலை பெற்றது. தடையற்ற உதை வாய்ப்பின் மூலம் கோல் அடித்த பெக்காம், மூன்று உலகக்கிண்ண ஆட்டங்களில் கோல் அடித்த முதலாவது இங்கிலாந்து வீரர் என்ற சாதனை படைத்தார்.

86ஆவது நிமிடத்தில் பெக்காமுக்கு பதிலாக லெனான் மாற்று வீரராகக் களமிறக்கப்பட்டார். கடைசி கட்டத்தில் ஈக்குவடோர் அணி பதிலடி கொடுக்க முடிந்த அளவுக்கு போராடிப் பார்த்தது. ஆனால் இங்கிலாந்தின் தற்காப்பு ஆட்டத்தை அவ்வளவு எளிதில் தகர்க்க முடியவில்லை. இறுதியில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் பிரமாதமாக நுழைந்தது.

# வெல்லப்போவது யார்? வெள்ளியன்று பலப்பரீட்சை

போர்லின், ஜூன் 27

உலகக்கிண்ணத் தொடரில் அதிக பலம் வாய்ந்த அணிகளாக கருதப்படும் ஜேர்மனி மற்றும் ஆர்ஜென்ரீனா ஜூன் 30இல் காலிறுதி ஆட்டத்தில் மோதுகின்றன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா கூடுதல் நேரத்தில் மெக்சிகோவை தோற்கடித்து காலிறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றது. அன்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஜேர்மனி அணி சுவீடன் அணியை எளிதாக தோற்கடித்துக் காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

காலிறுதி ஆட்டத்தில் மோதும் இவ்விரு அணிகளில் வெற்றி பெறும் அணிதான் அடுத்து அரையிறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெறும். ஆகவே, இந்த இரு அணிகளில் ஒன்று தனது உலகக்கிண்ணக் கனவை விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளது.

ஜேர்மனி முதல் சுற்றிலிருந்து தற்போது இரண்டாம் சுற்றுவரை அனைத்து ஆட்டங்களிலும் வென்றிருக்கிறது. கடந்த 16 ஆண்டுக்கு முன் இந்த அணி உலகக் கிண்ணத்தை வென்றது. ஆகவே, உள்ளூரில் நடக்கும் இத்தொடரில் கிண்ணத்தை வென்றாக வேண்டிய நிர்ப்பந்தத்தில் ஜேர்மனி உள்ளது.

1998இல் பிரான்சில் உலகக்கிண்ணத் தொடர் நடந்தபோது ஜேர்மன் அணி சம்பியனாக வாய்ப்புக் கிடைத்தது. அதேபோன்ற வாய்ப்பை இப்போது நழுவ விடக்கூடாது என்று ஜேர்மனி கருதுகிறது.

கடந்த 1954, 1974 மற்றும் 1990ஆம் ஆண்டுகளில் கிண்ணத்தை வென்றபோது மேற்கு ஜேர்மனி என்ற பெயருடனே இந்த அணி கிண்ணத்தை வென்றிருக்கிறது. இரு ஜேர்மனியும் இணைந்த பின்னர் முதன் முறையாக, சொந்த நாட்டில் நடக்கும் தொடரில் வெற்றி பெற இந்த அணி துடிக்கிறது. 1974இல் சொந்த நாட்டில் நடந்த உலகக்கிண்ணத் தொடரில் வென்று ஜேர்மனி கிண்ணத்தைக் கைப்பற்றியது. அதன் பின்னர் இப்போதுதான் ஜேர்மனியில் உலகக்கிண்ணத் தொடர் நடக்கிறது.

கடந்த 2002இல் உலகக்கிண்ண இறுதியாட்டம் வரை வந்த இந்த அணி, இம்முறை கிண்ணத்தை வென்றுவிட வேண்டும் என்ற இலட்சியத்துடன் இருக்கிறது. சொந்தமண்ணில் ஜாம்பவான்களை வீழ்த்தும் சக்தி ஜேர்மனிக்கு இருக்கிறது. 1990இல் கிண்ணத்தை வென்றபோது அணியில் இடம்பெற்றிருந்த கிளின்ஸ்மேன்தான் தற்போது பயிற்சியாளர். 'இம்முறை கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பை விடமாட்டோம். எங்களுடைய இலட்சியம் எல்லாம் அடுத்த சுற்றில் ஜெயிப்பது என்பது மட்டும் அல்ல. அதைவிட பெரிய அடுத்தடுத்த ஆட்டங்களிலும் ஜெயிப்பதுதான். அதுவரை எங்களை யாரும் தடுத்து நிறுத்தமுடியாது' என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ஜென்ரீனா நீண்ட இடைவெளிக்குப் பின்னர், துடிப்புடன் இந்த உலகக்கிண்ணத் தொடரில் களம் இறங்கியுள்ளது. முதல் சுற்றில் இரண்டு ஆட்டங்களில் வெற்றிபெற்ற இந்த அணி, நெதர்லாந்துடனான ஆட்டத்தை சமனிலை செய்தது.

1986ஆம் ஆண்டுக்குப் பின் கிண்ணத்தைப் பெறவில்லை என்பதாலும், அருகில் உள்ள நாடான பிரேசில் ஐந்து முறை வெற்றி பெற்றுள்ளதாலும், பழைய கணக்கை எல்லாம் தீர்த்துக் கொள்ள இந்த உலகக் கிண்ணதை வெல்வது அவசியம் என்று இந்த அணி கருதுகிறது. 'எங்கள் அணி விளையாடும் விதம் எனக்கு மிகவும் திருப்தி அளிக்கிறது' என்று அதன் பயிற்சியாளர் ஜோஸ் பெகர்மேன் தெரிவித்துள்ளார். எனவே, இந்த அணி ஜேர்மனிக்கு கடுமையான நெருக்கடியைக் கொடுக்கும்.

தங்கப் பாதணிக்கான போட்டியில் ஆர்ஜென்ரீனா மற்றும் ஜேர்மனி வீரர்கள்தான் தற்போது முன்னணியில் உள்ளனர். ஜேர்மனி வீரர்களான குளோஸ் 4 கோல்கள் அடித்து முன்னணியிலும், பொடோல்ஸ்கி 3 கோல்களை அடித்து இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

காலிறுதியில் தோற்கும் அணி வீரர்கள் தங்கள் வாழ்நாள் விருதை இழக்க வேண்டியிருக்கும். வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆட்டம் 'கிளேடியேட்டர்கள்' மோதிக் கொள்வது போல்தான் இருக்கும். ஜேர்மனி வீரர்கள் குளோஸ், பொடோல்ஸ்கி மற்றும் ஆர்ஜென்ரீன வீரர்கள் கிறஸ்போ, ரோட்ரிக்ஸ் ஆகியோர் தங்கள் அணியை அடுத்த கட்டத்துக்கு கொண்டுசெல்ல களத்தில் விஸ்வரூபம் எடுப்பார்கள். ஆகவே, இந்த ஆட்டத்தைக் காணும் ரசிகர்களுக்கு ஒரு மாபெரும் விருந்து காத்துக்கொண்டிருக்கிறது என்றே கூறவேண்டும்.

## இன்றைய ஆட்டங்கள்

இரண்டாம் சுற்று ஆட்டங்கள்

பிரேசில் – கானா
இடம் : டார்ட்மண்ட்
நேரம் : இரவு 08.30

ஸ்பெயின் – பிரான்ஸ்
இடம் : ஹனோவர்
நேரம் : நள்ளிரவு 12.30



FIFA WORLD CUP GERMANY 2006 தொகுப்பு அதிரன்

# முரட்டு மோதலில் போர்த்துக்கல் வெற்றி!

நூரம்பேர்க், ஜூன் 27

உலகக்கிண்ணத் தொடரின் 'கறுப்பு ஆட்டமாக' போர்த்துக்கல்- நெதர்லாந்து மோதல் அமைந்தது. ஆத்திரப்பட்ட வீரர்கள் அடிக்கடி மோதிக்கொள்ள, ஒவ்வொரு நிமிடமும் பதற்றம் எகிறியது. சிவப்பு அட்டை அடுத்தடுத்துக் காட்டப்பட இரு அணிகளும் தலா 9 பேருடன் விளையாட வேண்டிய மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டன.

முதல் பாதியில் மனிசே அடித்த கோல் மூலம் போர்த்துக்கல் 1-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. போராடிய நெதர்லாந்து தொடரில் இருந்து வெளியேறியது.

நேற்றுமுன்தினம் நூரம்பேர்க்கில் நடந்த 'நொக் - அவுட்' முறையிலான இரண்டாம் சுற்று ஆட்டத்தில் நெதர்லாந்து, போர்த்துக்கல் அணிகள் மோதின. ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் பாலேட்டா பந்தைப் பரிமாற்றம் செய்ய, அதைப் பெற்ற மனிசே 16 மீற்றர் தூரத்தில் இருந்து அப்படியே அசுர வேகத்தில் அடிக்க, போர்த்துக்கல் முதல் கோல் போட்டது.

இதற்குப் பிறகு போர்த்துக்கலுக்கு அடுத்தடுத்து சோகம்தான். 11ஆவது நிமிடத்தில் காலித் பலாருஸ், போர்த்துக்கலின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் தொடையில் சப்பாத்துக் காலால் பலமாகத் தாக்கினார். இதனால் வலியால் அவதிப்பட்ட கிறிஸ்டியானோ அழுதுகொண்டே 34ஆவது நிமிடத்தில் வெளியேறினார். இவருக்குப் பதிலாக சிமாவோ மாற்று வீரராக வந்தார். முதல் பாதி முடியும்போது இன்னொரு 'அடி'. இம்முறை பந்தை வேண்டுமென்றே கையால் தடுத்த கோஸ்டின்ஹோ, சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதையடுத்து போர்த்துக்கல் 10 பேருடன் விளையாட நேர்ந்தது.

இரண்டாவது பாதியில் இரு அணிகளுமே முரட்டு ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் நடுவர் வாலன்டின் இவானோவ் அதிக தடவை மஞ்சள் அட்டை காட்டினார். ஆட்டத்தின் 62ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலின் அணித்தலைவர் பிகோவை கடுமையாகத் தடுத்த, காலித் பலாருஸ் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதையடுத்து நெதர்லாந்தும் 10 பேருடன் விளையாடியது. 78ஆவது நிமிடத்தில் இன்னொரு அதிர்ச்சி. நெதர்லாந்து தடையற்ற உதையை அடிக்க முயன்றபோது போர்த்துக்கலின் டீகோ பந்தை எடுத்தார். உடனே சிவப்பு அட்டை காட்டப்பட்டு டீகோ வெளியேற்றப்பட, இப்போது போர்ச்சுகல் 9 பேருடன் விளையாட நேர்ந்தது. ஸ்டாபேஜ் நேரத்தில் நெதர்லாந்தின் வான் புரோன்காஹர்ஸ்ட் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். நெதர்லாந்தும் 9 பேருடன் விளையாட வேண்டியதாயிற்று. பெரும் போராட்டத்துக்குப் பிறகு போர்த்துக்கல் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

இவ்வாட்டத்தில் நான்கு முறை சிவப்பு அட்டை காட்டப்பட்டமை மற்றும் மொத்தம் 16 முறை மஞ்சள் அட்டை காட்டப்பட்டமை உலக சாதனயாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 28.06.06 விநியோகிக்கப்படும். றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை, ரவி -சாவகச்சேரி, தாரகை - பருத்தித்துறை, றாஜ்ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, நெல்லியடி, றாஜீவ் கால்நடை தீவன விற்பனை நிலையம், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு, சுன்னாகம், உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய கால்நடைச் சங்கக்கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம். T.P.: 222 2867, 222 3529 (51514)

## வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு அங்கத்தவர் கொண்ட ஆசிரிய குடும்பத்திற்கு உடன் வீடு வாடகைக்கு தேவை. கொக்குவில், யாழ்.நகர் அண்டிய பகுதிகளில் விரும்பத்தக்கது. பகுதியாக இருப்பினும் பரவாயில்லை. தொடர்புகளுக்கு குமார் ஆசிரியர் T.P.: 077 6531167 (51612)

## இணைந்த கணிதம்

பிரத்தியேக வகுப்புகள்
(Personal & Group Classes)
G.R.குமார்
T.P.: 0777252125
206/2, Brown Rd., Jaffna.
(51616) (21.11.15)

## மெய்வன்மைப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினரால் இன்றும், நாளையும் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடத்தப்படவிருந்த மாவட்ட ரீதியிலான கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ள புதிய திகதிகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும் என்றும் -

இது தொடர்பாக மேலும் விவரமறிய விரும்புவோர் 0776569382, 0777426924 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் - யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (203)

## விஞ்ஞான பாட மதிப்பீட்டுப் பரீட்சை

தென்மராட்சி,ஜூன்27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படும் விஞ்ஞான பாட செயற்றிட்ட மதிப்பீட்டுப் பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

இவ்வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இச் செயற்றிட்டத்தின் கீழ் ஐந்து கட்ட மதிப்பீட்டுப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் விஞ்ஞான பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்காக ஈழ ஏதிலியர் புனர்வாழ்வுப் பிரிவினர் இப்பரீட்சையை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (204-117)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

மட்டுவில் கிழக்கு ஆனைக்கார ஞான வைரவர் ஆலய நூதன சம்புரோஹண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை காலை 5.55 மணி தொடக்கம் 7 மணிவரை நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று அதிகாலை 3 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துவர்.

நாளை அதிகாலை 4 மணிமுதல் யாக பூசை, ஹோமம், மகா பூர்ணாகுதி, தீபாராதனை என்பன இடம்பெற்று சர்வமங்கள வாத்திய சகிதம் கும்பங்கள் வீதிப் பிரதட்சணம் இடம்பெற்று கும்பாபிஷேகம் நடைபெறும். (203)

## குடும்ப அட்டை மீளாய்வு

தென்மராட்சி,ஜூன்27

வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்படுவதாக மேற்படி பிரிவு கிராம அலுவலர் என். இராசலிங்கம் தெரிவித்துள்ளார். பொது மக்கள் தமது குடும்ப அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை சமர்ப்பித்து இவ்விடயம் சார்பில் ஒத்துழைக்குமாறு வேண்டப்பட்டுள்ளன. (122)

## வரணியில் விவசாய சம்மேளனக் கூட்டம்

தென்மராட்சி, ஜூன்27

வரணி வடக்கு விவசாய சம்மேளனப் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. வரணி வடக்கு கூட்டுறவுச் சங்க கிளை பொது மண்டபத்தில் இடம் பெறவுள்ள இக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சேவா லங்கா நிறுவனம் இச் சம்மேளனத்துக்கு மண்டபம் ஒன்றை கட்டித்தர முன்வந்துள்ளது. இக்கட்டடம் அமைப்பதற்கு காணியை அன்பளிப்பு செய்யுமாறு சம்மேளன செயலாளர் க.தியாகராசா பொது அறிவித்தல் மூலம் வேண்டியுள்ளார். (122)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு பொருள்களை வாகனத்தில் கொண்டு சென்று விற்பனை செய்யவும் பணம் வசூல் செய்வதற்கும் வேலையாள் தேவை.உடன் நேரில் வரவும்.

தொடர்பு:
**S.M.S.WORLD PVT**
291, பிறவுண் வீதி, கலட்டிச்சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0779231643, 0777915824
(சி-49840) (21.11.15)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ. இல.: 258/06
தன்மை: மணநீக்கம்

வழக்காளி:
சண்முகநாதன் உமாகாந்தன்
திருநகர், கிளிநொச்சி.
எதிராளி
உமாகாந்தன் றோசிஜெயந்தி
மே/பா. கதிரேசு
35, கோவாத் அவனியூ
(Howarth Avenue)
ரொரன்ரோ,
M1R1H3
கனடா.

### இடைக்காலத் தீர்வை

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு 03ஆம் மாதம் 06ஆம் நாள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் சி.சாதனா அவர்கள் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டவாளர் சூ.அச்சுதன் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளி தொடர்ந்து மன்றிற்குத் தோன்றாததன் அடிப்படையில் மன்றின் கட்டளைப்படி 2006ஆம் ஆண்டு 05ஆம் மாதம் 10 நாள் உதயன் பத்திரிகைக்குப் பகிரங்க அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டு திரும்பல் நாளும் மன்றால் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் எதிராளியோ அவரது உறவினரோ நலன் சார்ந்தோரோ மன்றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05ஆம் நாள் ஒருமுக விளக்கத்திற்காக நியமிக்கப்பட்டதற்கு அமைய ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் வழக்கறிக்கை வ1 ஆவணம் வழக்காளி மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து பரிசீலித்து எதிராளி வழக்காளியை நிலையான வன்ம உறவறுப்புச் செய்துள்ளார் எனும் அடிப்படையில் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 2001ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06ஆம் நாள் நிறைவேறிய பதிவுத் திருமணத்தை இத்தால் இரத்துச் செய்து இடைக்கால கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.


**2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் நாள்**

வரைவு
சூ.அச்சுதன்
வழக்காளி சட்டவாளர்
கிளிநொச்சி (சி/49844) (24.21.11.15)

ஒப்பம்: சி.சாதனா
நீதியாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
25 - 03 - 1916



ஆண்டவன் அடியில்
27 - 06 - 2002

திருமதி **மரியம்மா பத்திநாதர்**
(இளைப்பாறிய ஆசிரியை - அளவெட்டி)

அன்பையும் பண்பையும் ஊட்டி
இன்பமாய் எமை வாழ வைத்தாய்!
உத்தமியாய் நீ வாழ்ந்து
உயிர் தந்து நீ காத்தாய்!
ஊர் போற்ற நாம் வாழ
உனக்குள்ளே மகிழ்ந்தாய்!
ஆண்டு நான்கு ஓடி மறைந்தாலும்
உன் நினைவு நிழலாக தொடருதம்மா!
சீவியத்தில் உங்களை நேசித்தோம்
மரணத்திலும் உங்களை மறவோம்.

ஆன்ம இளைப்பாற்றிற்காக வேண்டி நிற்கும்:
ஞா.பத்திநாதர் குடும்பம்
அலுக்கை, அளவெட்டி.
(51421)
(21.11.15)

## ஆச்சாரியாபிஷேக அழைப்பு

உ

பேரன்புடையீர்!

சர்வமங்களம் பொருந்திய விய வருடம் ஆனி மாதம் 14 ஆம் நாள் (28.06.2006) புதன்கிழமையன்று பூச நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய காலை 9- 45 மணியின் மேல், 10.30 மணிவரையுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்த சுபநேரத்தில்
நீலகண்ட பரமேஸ்வரக் குருக்களின் பேரனும்
எமது புத்திரனுமாகிய

**பிரம்மஸ்ரீ. பிரசன்னரூப சர்மா**
அவர்கட்கு

சமய விஷேட நிர்வாணதீக்ஷா ஆச்சாரியாபிஷேகம்
(குருப்பட்டாபிஷேகம்)

வல்லை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் திருவருளினால் ஆலயமண்டபத்தில் நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. இவ்வைபவத்தில் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்மஸ்ரீ. தாணு மகாதேவ சிவாச்சாரியார்
(தர்ம சாஸ்தா குருகுலம்) ஆசியுடன்.

''தீக்ஷா குரு''
பிரம்மஸ்ரீ. சோமாஸ்கந்த சிவாச்சாரியார்
(மயிலணி)

தங்கள் வரவை அன்புடன் நாடி நிற்கும்:
சிவபுரம்- வல்லை.
T.P.:021 226 3337. (51629)
சிவப்பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
குடும்பத்தினர். (21.11.15)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம் (பளை)

வழ/இல:- 06/04
தன்மை:- பிரிவிடல்

வழக்காளி
1.வல்லி சின்னத்தம்பி,
செம்பியன்பற்று தெற்கு, தாளையடி

எதிராளிகள்
1.வல்லி இராசேந்திரம்
வைத்தியசாலையடி, தருமபுரம்
2.வல்லி ஆறுமுகம்
இல:344021 சந்திராலேன், வெட்டுக்காடு, திருமலை றோட், மட்டக்களப்பு.
3.மரியாம்பிள்ளை செபமாலை பெண் றோசம்மா
செம்பியன் பற்று, தாளையடி
மேற்படி 2ஆம் எதிராளிக்கு
4.எலியஸ் பேரம்பிள்ளை
செம்பியன்பற்று
5.கிராம அபிவிருத்திச் சங்கம் மருதங்கேணி

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கில் மேற்குறிப்பிட்ட எதிராளிகட்கு எதிராக இவ் வழக்கின் வழக்காளியால் பிரிவிடல் வழக்கானது சென்ற 2004-09-07 ஆம் நாளில் தாக்கல் செய்யப்பட்டு உரிய முறையில் எதிராளிகட்கு அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டும் 2ஆம் எதிராளியாகிய நீர் தொடர்ந்தும் ஒரு வருடத்திற்கு மேலாக மன்றிக்கு எவ்வித முன்னறிவித்தலுமின்றி சமுகமளிக்காமையால் இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது. இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாள்களுக்குள் நீரோ அல்லது உமது நலனில் அக்கறையுடையோரோ மன்றில் தோன்றி ஏதாவது மறுப்புக் கோரிக்கைகள் ஆட்சேபணைகள் இருப்பின் தெரிவிக்குமாறும் தவறின் இவ்வழக்கு குடியியல் சட்ட ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்கு அமைவாக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

நீதிமன்றக் கட்டளைப்படி

வரைவு
வழக்காளி சட்டவாளர்
திருமதி கலா விமலநிக்ஷன்
சட்டத்தரணி, இல.5, ஆனந்தபுரம் - கிளிநொச்சி. (51619)(21.11.15)

பதிவாளர் பொ.சுப்பிரமணியம்
தமிழீழ மாவட்ட நீதிமன்று, பளை
(யாழ்ப்பாணம்)

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் சுரேந்திரநாதன்



வசாவிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுரேந்திரநாதன் அவர்கள் 25.06.2006 ஞாயிற்றுக்கிழமை சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் -சாவித்திரி தம்பதியரின் அன்பு மகனும் அகிலாஸ்வரியின் அன்புக் கணவரும் மகிந்தன், சாவித்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருஞானசம்பந்தமூர்த்தி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பறாளை வீதி,
சுழிபுரம்.

தர்மபாலச்சந்திரன் (மைத்துனர்)
இராஜேஸ்வரி (சகோதரி),தற்பரநாதன் (சகோதரன்)
பரமானந்தி (மைத்துனி) (51622) (39)

## திருமதி முத்தம்மா இராசையாப்பத்தர்

சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி முத்தம்மா இராசையாபத்தர் 26.06.2006 திங்கட்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கப் பத்தர்- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விஸ்வகுலதுங்கம் இராசையாப் பத்தர் அவர்களின் அன்பு மனைவியும் தங்கராசா, யோகராசா (சித்தப்பா) ஆகியோரின் தாயும் மல்லிகாதேவி, புஸ்பராணி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான தம்பையாப்பத்தர், ஆறுமுகம், நடராசா மற்றும் இராசகோபால் (நிலஅளவையாளர்) காலஞ்சென்ற யோகம்மா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் குமுதா (டென்மார்க்), வனஜா, பவன் (ராஜூ) ஆகியோரின் பேர்த்தியும் சௌமியா, சௌயனா, நிவேதன், சோபிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
இல.980, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (51625) (39.21.11.15)

இ.யோகராசா (சித்தப்பா),
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மூத்தபடைத் தளபதி மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்க மீது நேற்று கொழும்பு பன்னிப்பிட்டியவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் எடுக்கப்பட்ட படங்கள் இவை. தற்கொலை தாக்குதலுக்கு இலக்கான தளபதி பயணம் செய்த கார் சின்னாபின்னமாகக் கிடப்பதை முதல் இரு படங்களிலும், சம்பவம் இடம்பெற்ற இடத்தில் படையினர் குழுமிநிற்பதை அடுத்துள்ள இரு படங்களிலும், சம்பவத்தை அடுத்து வாகனங்கள் சீருடையினரால் தீவிரமாகப் பரிசோதனை செய்வதை இறுதியாக உள்ள படத்திலும் காணலாம்.

## பணிப்புறக்கணிப்பு மிகவும் இறுக்க ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட தமிழ்த் தேசியத் தொழிற்சங்க கூட்டமைப்பு இப்படி அறிவித்துள்ளது.

பணிப்புறக்கணிப்புப் போராட்டம் குறித்து அந்த அமைப்பு நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டு மக்கள் கொலை அச்சுறுத்தல்கள், இராணுவ நெருக்குவாரங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், அதை நிறுத்தக்கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயல்களைத் தொடர்ந்து கொண்டு, போராட்டத்தைத் தொடர வேண்டாம் எனக்கேட்பது நியாயமற்றது. எதிர்வரும் நாள்களில் பணிப்புறக்கணிப்பு போராட்டம் இறுக்கமாக மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொருவரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இன்றி, இயல்பு நிலையில் வாழவேண்டும் என்பதே முக்கியம். இதை வலியுறுத்தியே இப்போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அச்சுறுத்தல் மூலம் எவரையும் அடிபணியவைக்க முடியாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும்.

இந்தப் போராட்டத்துக்கு காரணமானவர்கள் அச்சுறுத்தல், கொலைகளை நிறுத்தும் பட்சத்தில் போராட்டத்தை மீளாய்வு செய்வது குறித்து முடிவு செய்யலாம்.

மக்களுக்கு எதிரான சம்பவங்கள் தொடரும் வரை பணிப்புறக்கணிப்பு போராட்டம் இறுக்கமாக முன்னெடுக்கப்படும்.

அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல் சகலரும் இப் போராட்டத்தில் மானசீகமாக பங்கேற்கவேண்டும் - என்று அதில் உள்ளது.

இதேவேளை - பணிப்புறக்கணிப்புக் காரணமாக நேற்று குடாநாட்டில் பாடசாலைகள், வங்கிகள், அரசு அலுவலகங்கள், ஆகியவை இயங்கவில்லை.

பொதுமக்கள் அச்சமற்ற இயல்பு வாழ்வு வாழ வழியேற்படுத்த அரசை வலியுறுத்தி யாழ். மாவட்டத் தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தொடர் பணிப் புறக்கணிப்புக்கு அழைப்பு விடுத்திருந்தது.

போராட்டத்தின் முதல் நாளான நேற்று அரசு அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள் ஆகியவை பணிப் புறக்கணிப்பால் முடங்கின.

பொதுப் போக்குவரத்து, மருத்துவமனைகள் போன்ற அத்தியாவசிய சேவைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் இயங்கின. ஆயினும் சன நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது.

யாழ். செயலகத்தில் அரச அதிபர் அலு வலகம் உட்பட சில அரச அலுவலகங்களில் பொது மக்களின் தவிர்க்க முடியாத தேவைகளைப் பூர்த்தி செய்யும்முகமாக சில அலுவலர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பணியாற்றினர் என பிரதேச செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(70-15-117-173-139-135)

## குளத்தில் குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

வேலணை பகுதியில் உள்ள குளம் ஒன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் குளிக்கச் சென்றவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதேயிடத்தைச் சேர்ந்த செல்லன் சிவஞானம் (வயது - 50) என்ற மனநோயாளியே உயிரிழந்தவராவார்.

இந்தக் குளத்தில் இவர் குளிக்கச் செல்வது வழமை என்றும் - அதேபோன்று நேற்றுமுன்தினம் குளிக்கச் சென்ற சமயம் ஆழப் பகுதியில் மூழ்கியதால் மரணமானார் என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச்சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் றொக்ஸி மரணவிசாரணை நடத்தியபின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
14 . 03 . 1939



மறைவு
29 . 05 . 2006

### அமரர் சின்னராசா நாகம்மா

கடந்த 29.05.2006 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (28.06.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*1ஆம் ஒழுங்கை,*
*அரசடி வீதி, நல்லூர்.* (51632)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா யோகேஸ்வரன்



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா யோகேஸ்வரன் அவர்கள் நேற்று (26.06.2006) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கந்தையா - செல்லம்மாவின் மகனும் லூர்துநிலாவின் அன்புக் கணவரும் யோன்ஸ்லாவன், லாவண்யா, லாண்சண்யா, லான்சிகா ஆகியோரின் தந்தையும் கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன், மகேஸ்வரன், லிங்கேஸ்வரன், அகிலேஸ்வரி, ஞானேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2006) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4மணிக்கு செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.* (51635)

தகவல்:
மனைவி.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ. இல.: 258/06
தன்மை: மணநீக்கம்

*வழக்காளி:*
சண்முகநாதன் உமாகாந்தன்
திருநகர், கிளிநொச்சி.
*எதிராளி*
உமாகாந்தன் றோசிஜெயந்தி
மே/பா. கதிரேசு
35, கோவாத் அவனியூ,
(Howarth Avenue)
ரொரன்ரோ,
M1R1H3
கனடா.

### அறிவித்தல்

வழக்காளியால் எதிராளிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கில் எதிராளிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு பகிரங்க அறிவித்தலும் பிரசுரிக்கப்பட்டமைக்கு அமைவாக எதிராளியோ அல்லது அவரின் நலன் சார்ந்தோரோ தோன்றாததால் ஒருமுக விளக்கம் நடைபெற்று இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டு 21 நாள்களுக்குள் எதிராளியோ அல்லது அவரின் நலன்சார்ந்தோரோ மன்றில் தோன்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கத்தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இவ் இடைக்கால தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

**2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் நாள்**

**வரைவு**
**சு.அச்சுதன்**
*வழக்காளியின் சட்டவாளர்*
*கிளிநொச்சி.* (சி/49845) (24)

*திருமதி ற. தேவதாஸ்,*
*பதிவாளர்,*
*தமிழீழ மாவட்ட நீதிமன்று*
*கிளிநொச்சி.*

## தேவை

*அனுபவம் உள்ள / இல்லாத 21-55 வயதிற்குட்பட்ட நல்ல தேகாரோக்கியம் உள்ள ஆண்கள் பாதுகாப்பு சேவையில் கடமை ஆற்றத் தேவை. சான்றிதழ்களுடன் ஜூன் 27-29 வரை தினமும் காலை 10 - ஒரு மணி வரை நேரில் வரவும். வரமுடியாதவர்கள் ஜூலை 5ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்கவும்.*

**NORTHERN GUEST INN**
No.20, கன்னாதிட்டி ஒழுங்கை,
(சயன்ஸ் கோல் பின்புறமாக),
யாழ்ப்பாணம்.
(51631) (24)

**ராஜா** யாழ்ப்பாணம்
கரன், சாதனா நடித்த
**கொக்கி**
புதிய வெளியீடு
(சி-47139)
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

**நாதன்ஸ்** சினிமா யாழ்ப்பாணம்
காட்சி நேரம் : 10.30, 2.30
ஜித்தன் புகழ் ரமேஸ், பிரியாமணி,
விவேக் நடித்த
[illegible]

# அதி சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை கொலையாளி உடலிலும் மோ. சைக்கிளிலும் பொருத்தி வந்தாரா?

## பாதுகாப்பு வட்டாரங்கள் அதிர்ச்சி! தற்கொலையாளியின் தலை மீட்பு

கொழும்பு, ஜூன் 27

மூத்த படைத்தளபதி குலதுங்கவின் உயிரைப் பலிகொண்ட நேற்றைய தாக்குதலுக்கு அதி சக்திவாய்ந்த 'ரி.என்.ரி.' ரக வெடிகுண்டு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

சுமார் 10 கிலோ வெடிமருந்து அடங்கிய குண்டை தற்கொலையாளி வெடிக்கச் செய்திருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தனது உடலிலும், மோட்டார் சைக்கிளிலும் குண்டுகளைப் பொருத்தி வந்து இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று புலனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

தாக்குதல் நடத்திய குண்டுதாரியின் தலை, குண்டுவெடித்த இடத்திற்கு அருகில் இருந்து நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய சம்பவத்தையடுத்து அந்த இடத்திற்கு வந்த கங்கொடவில நீதிவான் திருமதி பத்மினி ரணவக்க விசாரணைகளை மேற்கொண்டார். அரச இரசாயன பகுப்பாய்வாளர்கள் சம்பவ இடத்திற்கு வந்து தடயங்களைப் பதிவு செய்துகொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார். மேல்மாகாண குற்றப்புலனாய்வு பொலிஸார் இது குறித்ததான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரம்பகட்ட விசாரணைகளின்படி ரி.என்.ரி. ரக வெடிமருந்துப் பொருள்கள் இந்த தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

ஏற்கனவே கொழும்பில் இராணுவத் தளபதியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் முழு வெற்றியளிக்காத காரணத்தினால், இம்முறை கூடுதலான வெடிமருந்துப் பொருள்களை தாக்குதலாளி தன்னுடன் கொண்டு வந்திருப்பது தெளிவாகப் புலனாவதாகப் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் கூறின.

நேற்று கண்டுபிடிக்கப்பட்ட தற்கொலையாளியின் தலை மேலதிக ஆய்வுகளுக்காக அரச பகுப்பாய்வாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (ஐ)

# தாக்குதல் பற்றிய அநாமதேய தகவல் வைத்தியசாலைக்கு முன்பே கிடைத்ததா?

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான தகவல் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்கூட்டியே கிடைத்ததா என்பது குறித்து பொலீஸார் விசாரணை நடத்துகின்றனர்.

நேற்றுக்காலை ஆறரை மணியளவில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கிடைத்த தொலைபேசி அழைப்பொன்றில், "இன்று என்ன நடக்குமென்று பாருங்கள். உங்களுக்கு அதிகமான வேலை இருக்கப்போகிறது'' என்று கூறப்பட்டதாம்.

இதனைக் கேட்ட பின்னர் தேசிய வைத்தியசாலையின் தொலைபேசி இயக்குநர் இதுபற்றி வைத்தியசாலையின் பணிப்பாளருக்கும், இதர அதிகாரிகளுக்கும் அறிவித்தார். இதுபற்றி பொலீஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தொலைபேசி அழைப்புக் கிடைத்த ஒரு மணிநேரத்தின் பின்னர், பன்னிப்பிட்டியவில் தற்கொலைத் தாக்குதல் இடம் பெற்றமை தேசிய வைத்தியசாலையின் பணியாளர்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்தத் தொலைபேசி அழைப்பிற்கும், பன்னிப்பிட்டிய தற்கொலைத் தாக்குதல் சம்பவத்திற்கும் தொடர்புகள் இருக்கின்றனவா என்பது குறித்துப் பொலீஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ஐ)

## பயங்கரவாதச் செயல் என்று இந்தியாகடும் கண்டனம்

கொழும்புக்கு அருகே நேற்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலை ஒரு பயங்கரவாதச் செயல் என்று கூறிக்கண்டித்திருக்கிறது இந்தியா.

நேற்றைய தாக்குதல் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது:-

மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவும் மேலும் சில இராணுவத்தினரும் ஆயுததாரிகளால் குண்டுவைத்துக் கொல்லப்பட்ட சம்பவத்தை இந்தியா வன்மையாக் கண்டிக்கின்றது - என்றார்.

## யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்மீது ஆரியகுளம் சந்தியில் சூடு!

யாழ். ஆரியகுளம் சந்திக்குச் சமீபமாக - பலாலிவீதி 2ஆம் ஒழுங்கையில் நேற்று மாலை 6.55 மணியளவில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மாணிக்கம் கனகரட்ணம் (வயது 70) என்பவரே இவ்வாறு படுகாயங்களுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற அதிபரான இவர், ஈ.பி.டி.பியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாழ். மாநகரசபையில் சுமார் 5 வருடங்கள் உறுப்பினராக இருந்தவர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

# ஆயுத ஒடுக்குமுறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✱ தீவிர இனவாதப் போக்காளரான குலதுங்கவின் தமிழருக்கு எதிரான இராணுவச் செயற்பாடுகள் 1970ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பித்துவிட்டன. 1978 இல் சாதாரண அதிகாரியாக இயங்கியபோதே யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதில் முனைப்பாக இருந்தவர்.

1990களின் பின்னரான இரண்டாம் கட்ட ஈழப்போர் காலத்தில் தமிழருக்கு எதிரான இவரது இராணுவ நடவடிக்கைகள் மிகத் தீவிரம் பெற்றிருந்தன.

1995 ஆம் ஆண்டின் பின்னர் யாழ். குடாநாடு மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலும் பங்கேற்று தமிழ் மக்களின் படுகொலைகள், கைது மற்றும் காணாமற்போதல் போன்ற செயற்பாடுகளுக்கும் காரணமானவர்.

தமிழீழப் பிரதேசத்தின் தொண்டையை இறுக்கும் நடவடிக்கையாக ஆனையிறவுப் பெருந்தளத்தை தொடர்ச்சியாக ஆக்கிரமிப்பில் வைத்திருக்கப் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்.

2004ஆம் ஆண்டு இவர் வன்னிப் பிராந்தியத்தின் தளபதியாகப் பதவியேற்ற பின்னர் அங்கு தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள் அதிகரித்தன.

துணை ஆயுதக் குழுக்களான புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), ஈ.பி.டி.பி போன்றவற்றை பாதுகாப்பதிலும் அவர்களூடாக வன்னி மற்றும் மன்னார் பிரதேசங்களில் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதிலும் முன்னின்றவர்.

தமிழர் எழுச்சி நிகழ்வுகளான பொங்கு தமிழ் போன்ற நிகழ்வுகளை அடக்குவதற்குப் பெரும் பிரயத்தனம் எடுத்தவர் குலதுங்க.

தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்தத்தை விரும்பாதவராகவும், அதற்கு எதிரான செயற்பாடுகளில் மறைமுகமாக ஈடுபடுபவராகவும் விளங்குபவர் குலதுங்க.

- இவ்வாறு அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன. (ஐ)

# புலிகளுக்குத் தொடர்பில்லை மறுக்கின்றார் புலித்தேவன்

கிளிநொச்சி, ஜூன் 27

ஸ்ரீலங்கா இராணுவ ஜெனரல் பாரமி குலதுங்கவின் படுகொலையில் புலிகள் எந்த விதத்திலும் சம்பந்தப்படவில்லை என்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்திருக்கிறார்.

'இராணுவப் பேச்சாளர் எப்போதுமே விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டுவதில் முனைப்புடன் இருப்பார்.

''இலங்கை இராணுவம் மற்றும் கடற்படை பிரிவுகளின் உள்ளே நிறைய உட்பூசல்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, உண்மையில் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்று எமக்குத் தெரியவில்லை''

இப்படி புலித்தேவன் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க பி.பி.ஸிக்குத் கருத்துத் தெரிவிக்கையில் -

''கடந்த காலங்களைக் கவனத்தில் எடுத்துப் பார்த்தால் இலங்கையில் இடம்பெற்ற அனைத்துத் தற்கொலைத் தாக்குதல்களையும் விடுதலைப் புலிகள் அமைப்பே நடத்தியுள்ளது. ஆகவே, இத்தாக்குதல் சம்ப வத்தை உறுதிசெய்யத் தேவையில்லை.

''அரசைப்பொறுத்தவரையில் போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னமும் நடைமுறையில் உள்ளது. ஆகவே, இது ஒரு நேரடியான யுத்த நிறுத்த மீறலாகும்.'' - என்றார். (ஐ)

# மூத்த படைத் தளபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரையானார்.

மோட்டார் சைக்கிளில் வந்தார் எனக் கூறப்படும் தற்கொலைக் குண்டுதாரி சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் தளபதி குலதுங்கவின் வாகனத் தொடரணியைப் பின்தொடர்ந்து சென்று தாக்குதல் நடத்தியிருக்கிறார் என்பது தெரியவந்துள்ளது.

'ஹைலெவல்' வீதியூடாக வந்த தளபதியின் வாகனத் தொடரணி பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் வாகன நெரிசலில் சிக்கி நின்றுகொண்டிருந்தபோது, பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைதாரி காரின் மீது மோதிக் குண்டை வெடிக்க வைத்தார் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

காரின் பின் இருக்கையில் தளபதி குலதுங்க அமர்ந்திருந்தார் என்று கூறப்படுகிறது. தற்கொலைக் குண்டுதாரி தான் செலுத்திவந்த மோட்டார் சைக்கிளை தளபதி அமர்ந்திருந்த பக்கமாகக் கொண்டு சென்றே மோதி உள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது. இதன்போது மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவின் கார்ச் சாரதியான இராணுவ சார்ஜன்ட் கோமஸ், கோப்ரல் தனுஷ்க மதுரங்க ஆகியோர் அதே இடத்தில் உயிரிழந்தனர். தளபதி பாரமி குலதுங்க கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும்போது உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதலினால், தளபதி பயணம் செய்த கார் முற்று முழுதாக தீக்கிரையானது. அவருக்குப் பாதுகாப்பு வழங்கி வந்துகொண்டிருந்த இரண்டு 'பிக்கப் ஜீப்' வண்டிகளும், வீதியில் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றும், வான் ஒன்றும் சேதமடைந்தன. தற்கொலைதாரி செலுத்தி வந்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் சிதறிச் சின்னாபின்னமாகியது. மோட்டார் சைக்கிளின் எரிந்த ரயரின் ஒரு பகுதி தொலை தூரத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. பாரமி குலதுங்கவின் திருமண மோதிரம் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உபாலி ரோஹண என்ற சிவிலியனும் இந்தத் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தார். தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி தீக்கிரையாகிக் கொண்டிருந்த காரின் தீயை அணைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்காத நிலையில் கார் முற்றாக எரிந்து போனது.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் அமைந்துள்ள சில வீடுகளுக்கும் குண்டு வெடிப்பினால் சிறு சிறுசேதங்கள் ஏற்பட்டன.

சம்பவம் இடம்பெற்றவுடன் 'ஹைலெவல்' வீதியை மறித்து பொலிஸார் தீவிர தேடுதல்களை நடத்தியபோதும் சந்தேகத்திற்கிடமான எவரும் கைது செய்யப்படவில்லை.

இலங்கை இராணுவக் கட்டமைப்பில் மிக உயர்ந்த மூன்றாம் நிலைத் தளபதியாகச் செயற்பட்டு வந்தவர் பாரமி குலதுங்க. இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிய பின்னர் இரண்டாம் நிலையில் இருந்த நந்த மல்லவராச்சி முதல் நிலைத் தளபதியாகப் பதவி உயர்த்தப்பட்டதையடுத்து பாரமி குலதுங்க இரண்டாம் நிலைக்கு வந்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களின் கட்டளைத் தளபதியாகப் பதவி வகித்திருக்கும் பாரமி குலதுங்க 1961 ஆம் ஆண்டு இராணு வத்தில் 'கடெற்' அதிகாரியாக இணைந்தார். 1999 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆனையிறவு படைத் தளத்தின் 54 ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாகப் பதவி வகித்திருந்த தன் மூலம் தளபதி குலதுங்கவின் போர்க்கள அனுபவம் பெறுமதி மிக்கதென பாதுகாப்பு வட்டாரங்களில் கருதப்படுகிறது.

தலைநகர் கொழும்பிலும், புற நகர்ப் பகுதிகளிலும் நாசகாரச் செயல்களைத் தடுப்பதற்காகக் கட்டுக் காவல்கள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் நேற்று வெற்றிகரமாக நடத்தப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல் பாதுகாப்புத் தரப்பினரை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. (ஐ)

# யுத்த நிறுத்த காலத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்தும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் இறுக்கமாக்கி சட்டம், ஒழுங்கைப் பேணும் அவசியத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வருவதற்கு முன்பிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை இராணுவம் மீள அறிமுகப்படுத்தும் என்று இராணுவத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் நேற்று வெளியான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி இராணுவம் தனது முந்திய எல்லா நிலைகளிலும் புதிய நிலைகளையும் பலப்படுத்திப் பேணுவதுடன் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் வீதித் தடைகளையும் சோதனை நிலைகளையும் நிறுவி தேவைக்கு ஏற்ப செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் எடுத்துவரப்படும் பொருள்கள், வாகனங்கள் சோதனையிடப்பட்டு நூறுசதவீதம் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிறகே அனுமதிக்கப்படும்.

தேசிய நலனைக் கருத்தில் கொண்டு இராணுவத்தினரும், பொலிஸாரும் மேற்கொள்கின்ற இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் இராணுவம் கேட்டுக்கொண்டுள்ளது.

லெப்டினன்ட் ஜெனரல் பாரமி குலதுங்க கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து நேற்று ஜனாதிபதி தலைமையில் அவசரமாகக் கூடிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமையவே இராணுவம் இந்தப் புதிய பாதுகாப்பு ஒழுங்குகளை அமுலுக்குக்கொண்டு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும், புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முந்திய காலப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அமுலுக்கு வர இருப்பது குறித்து அரசுத் தரப்பில் இருந்து உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் உடனடியாக வெளிப்படுத்தப்படவில்லை. (ஐ)

# ஆழ ஊடுருவும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கமான தொடர்புகளை வைத்துச் செயற்பட்டவர் குலதுங்க. இதன் காரணமாக அவருக்குக் கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அவரது நடமாட்டங்கள் மட்டுப் படுத்தப்பட்டிருந்தன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்னிப் பெரு நிலப்பரப்பு உட்பட விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களுக்குள் ஆழ ஊடுருவும் படையணியின் செயற்பாடுகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன.

புலிகளின் பகுதிகளுக்குள் இந்தப் படையணி புகுந்து பல கிளைமோர் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றது. புலிகளின் தளபதிகள், முக்கிய போராளிகள் இந்தத் தாக்குதல்களில் சிக்கி உயிரிழந்திருக்கின்றனர். இதனால், புலிகள் கடும் சீற்றமடைந்து இருக்கின்றனர்.

இந்தப் படைப் பிரிவினரின் தாக்குதல்களில் மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தளபதி ரமணன், மன்னார் மாவட்ட நடவடிக்கைச் செயற்பாட்டுத் தளபதி மகேந்தி போன்ற முக்கிய தளபதிகளைக் கூட புலிகள் இழந்துள்ளனர்.

இந்த இழப்புகளுக்குப் பதிலடியாகவே புலிகளால் திட்டமிட்டு மேஜர் ஜெனரல் குலதுங்க இலக்கு வைக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார் என்றும் சில பாதுகாப்பு வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

மேஜர் ஜென்ரல் குலதுங்கவின் இழப்பு இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படைப் பிரிவின் செயற்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ)

**CHEMISTRY DAY CLASS**

★ அலகுரீதியான மீட்டல்
★ அலகுரீதியான வினாவிடை
★ மாதிரி வினாக்கள்
★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
★ 20 SEMINAR
★ 5 MODEL EXAM

ஆரம்பம்: 28/06 Wed. 10 a.m.

By. அன்பழகன் B.Sc.

**NEW SCIENCE CENTRE**

யாழ். நகர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org